தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ0கஉ	மலர்
ருரு	துன்மதி-வைகாசி, ஆனி	உ-ந
	1981 மே--சூன்--சூலை.	

தமிழ் வாழ்க

மதுரை மாநகரில்

4—1—'81 முதல் 10—1—'81 வரை

நிகழ்ந்த

ஐந்தாம்

உலகத் தமிழ் மாநாட்டிற்

கலந்துகொண்ட பன்னாட்டுப் பேரறிஞன்மார்

13—1—'81 ஆம் நாள்

தஞ்சை மாநகர்க்கு வருகைதந்த ஞான்று

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்

அவர்கட்கு உவந்தளித்த

வரவேற்பு வாழ்த்து மடல்

தென்குமரிப் பொன்னாட்டிற் றோன்றித் தெய்வத்
திறல்மலிசெஞ் சொற்புலவோர் சிந்தை தோய்ந்து
மின்பொலிவேல் மன்னவர்நா வலர்தம் நெஞ்சில்
மேவியகப் புறப்பொருளாய்த் திணையி ரேழாய்
மன்பதைக்காம் அறம்பொருளின் பத்தை நல்கி
வள்ளுவர்தொல் காப்பியர்தம் வாய தாகி
நன்கியலும் பைந்தமிழை நாட நாடி
நண்ணியபன் னாட்டறிஞீர்! வருக! வாழ்க!

2

பாரதத்துப் பன்மொழியுள் பழமை மேவிப்
பண்பட்ட திராவிடத்தென் மொழிக ளுக்குள்
வேருதித்த செம்மையொடு மக்கள் வாழ்வை
வீறுபெறச் செய்யுமியல் போங்கி நிற்கும்
சீரெதிர்ந்த செந்தமிழின் திறலை ஓர்ந்து
தேர்ந்து தமிழ்க்குறவாகித் திகழும் சான்றீர்!
பாருதித்தோர் யாவரும்நம் கேளிர் என்னும்
பண்பாட்டிற் கிலக்கியமாய்த் திகழ்வீர் வம்மின்!

3

சோனகஞ்சிங் களம்யவனம் பார சீகம்
தொல்கடல்சூழ் சாவகம்புட் பகங்க டாரம்
சீனமுதற் றேயமெலாம் வாணிகத்தாற்
சென்றுதமிழ்ச் சீர்த்தியினைத் திறலாற் காட்டித்
தேனமுதப் பொருள்கவர்ந்து நட்பா லோங்கித்
தென்பாண்டி நித்திலத்தை மிளகோ டீந்து
மீனொடு வில் புலிக்கொடியை விளங்கச் செய்த
வேம்பன்உயர் விழவுமலி மதுரை மூதூர்

4

கவினுற ஐந்தாம் உலகத் தமிழ்மா நாட்டிற்
கலந்தாய்வுக் கருத்தளித்துத் தமிழின் மாண்பைப்
புவியுணரச் செய்துவரும் புலமைச் சான்றீர்!
பொன்னிவளத் தாலுயரும் புனல்நாட் டின்கண்
செவியுணவாச் சிந்தையிலே தேனைப் பாய்ச்சும்
செந்திறத்த யாழொடுபல் முழவும் கண்ணுள்
தவழுமெழிற் சிற்பமொடு கலைமலிந்த
சதிரெனுஞ்சீர்ப் பரதமுயல் கூத்தும் பாட்டும்

5

விஞ்சைமிகச் செய்துயரும் வியன்மூ தூராம்
வீறுமிக்க கலைமகள்மாக் கூடம், வானின்
மஞ்சுபடிந் தழகூட்டும் பெரிய கோயில்
வயல்முத்தால் உலகூட்டும் மருதம் சான்ற
தஞ்சையெனும் மாநகர்க்கு வருகைதந்தீர்!
தஞ்சைக்குப் பெருமைதரும் தமிழ்மா மன்றம்
கொஞ்சுதமிழ் வளம் வளர்க்கும் கொள்கையாலே
கூர்த்தபணி புரிகரந்தைத் தமிழ்ச் சங்கத்தேம்

6

வருகவென உளங்கனிந்து வரவேற் றேத்தி
வாழ்த்துகிறோம் வருகதமிழ் வளர்க்கும் நல்லீர்!
முருகியநற் பழமைக்கும் பழமையாகி
முன்னிவரும் புதுமைக்கும் புதுமையாகிப்
பெருகுமியல் சான்றதமிழ் பேது றாமல்
பீடுபெற ஆய்ந்தினிது வளர்த்தெல் லோரும்
பருகும்வகை செய்துபுகழ் மேவிநாளும்
பைந்தமிழ்போல் பல்லூழி வாழி! வாழி!

கரந்தை, தஞ்சை,
13—1—1981

இங்ஙனம்,
கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்.

கதைப் பாடல்கள்–
சில விளக்கங்கள்

அ. ம. சத்தியமூர்த்தி,
கலையியல் நிறைஞர், ஆய்வியல் நிறைஞர்,
சுவடியியல் நிறைசான்றிதழ்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்.

முன்னுரை:

இலக்கியத்தின் இன்றியமையாத கூறுகளுள் ஒன்றான கதைப் பாடல்களின் தோற்றம், வளர்ச்சி, வாழ்வு, பயன் முதலானவற்றை இலக்கிய வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு மதிப்பிடுமிடத்து அத்தொல்லிலக்கியத்தின் சிறப்புக் கூறுகள் விளங்கும். அதனை உணர்த்த முயல்வதே இக்கட்டுரையின் கருதுகோள்.

கதைப் பாடல்களின் தோற்றம்:

உண்மை நிகழ்ச்சி, பொய் வார்த்தை, மிகைப்படுத்தல், கட்டியுரைத்தல், விசித்திரச் செய்திகள், சொல்லுதல், உரையாடல், வரலாறு—சரித்திரம் முதலானவற்றிற்குச் சமுதாயம் 'கதை' எனப் பெயர் சூட்டியது. இக்கதையானது மனிதன் தன் அனுபவத்தை அடுத்தவனுக்குக் கூற முற்பட்ட அன்றே பிறந்துவிட்டது. இவ்வாறு பிறந்த கதையானது உரைநடையாகவும் அமைந்திருக்கலாம், செய்யுள் நடையாகவும் இருந்திருக்கலாம். ஆயினும் பாடல் வடிவில் அமைந்த கதைகளே தொன்மையாக நமக்குக் கிடைக்கின்றன. அவ்வாறாயின் உரைநடையில் தோன்றிய கதைகள் கிடையாதா? தோன்றியிருந்தால் அவை ஏன் கிடைக்கவில்லை? செய்யுள் நடையில் தோன்றிய கதைகள் மட்டும் நிலைத்திருக்கக் காரணம் என்ன? என்பன போன்ற வினாக்கள் நம் மனதில் எழுகின்றன.

கதைப் பாடல்களின் வாழ்வும் வளமும்:

தொன்மைக் காலத்தில் தற்காலம்போல் எழுது கருவிகள், எழுது பொருள்கள், எழுதப்படும் பொருள்கள் முதலியன எளிமையுடையனவையாகவும், எளிதில் கிடைக்கக் கூடியனவையாகவும் அமையவில்லை. உரைநடையைக் காட்டிலும் செய்யுள் நடையிலேயே சுருங்கக்கூறி விளங்க வைக்க இயலும் என்று எண்ணினர். எனவேதான் கதைகளைக் கூறச் செய்யுள் நடையைத் தேர்ந்தெடுத்தனர்.

கதைகள் காலம், இடம் ஆகியனவற்றைக் கடந்து நடைபெறுகின்ற காரணத்தால், அவற்றை மனப்பாடம் செய்து வைத்துக் கொண்டே ஆக வேண்டும். மனனம் செய்வதற்கு உரைநடையைக் காட்டிலும் செய்யுள் நடையே எளிமையானது. செய்யுள் நடையின் எளிமை, எதுகை, மோனை அமைப்பு முதலியன மனனம் செய்ய வாய்ப்பாக அமைகின்றன. ஆகவேதான், பிற்காலத்தில் இறையனார் களவியலுக்கு உரையெழுத வந்த களவியலுரைகாரர், தமது உரைநடை நூலில் பலவிடங்களில் செய்யுள் நடையைக் கையாளுகிறார். சான்றாகத் தன் ஆயத்தைப் பிரிந்து தனியே நிற்கும் தலைவியின் நிலையைக் கூற வந்த உரைகாரர்,

"யாங்ஙனம் நிற்குமோ எனின்
... ...
இளஞாயிறு இளவெயில் எறிப்பஒர்
இளமயில் ஆடுவது நோக்கி நின்றாள்"[1]

என ஏறத்தாழ முப்பத்தெட்டு அடிகளில் தொடர்ந்து ஆற்றொழுக்குபோல் அமைந்த செய்யுள் நடையைக் கையாண்டுள்ளார். இதுபோன்றே அவ்வுரையினுள் அமைந்த செய்யுள் நடைப் பகுதிகள் மிகுதியானவையாகும். எனவேதான் கதைகள் எவ்வடிவில் தோன்றியதாய் இருந்தபோதிலும் செய்யுள் நடையில் தோன்றியவைகளே நிலைத்தன / வளர்ந்தன / இன்புறுத்தின/பயன்பட்டன. கதைக்கும் பாடலுக்கும் மூன்றுவகையான தொடர்புகள் காணப்படுகின்றன, அவை (1) பாடல்கள் தோன்றுவதற்குரிய உணர்ச்சிக்கு இக்கதையின் வரலாறு நேரே காரணமாக அமைவது. (2) ஏதேனும் ஒரு கருத்து அல்லது உணர்ச்சியை வெளியிடுவதற்குக் கவிஞன் வியாசமாக ஏதேனுமொன்றை எடுத்துக் கொள்வது. (3) கவிஞன் தனது கவிதைச் சித்திரத்தை வரைவதற்குரிய திரையாகக் கதை அமைவது என்ற பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் கருத்தும் இவண் குறிப்பிடத்தக்கது[2]

கதைப் பாடல்கள்:

கதைப் பாடல்கள் குறித்து பல்வேறு ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். மால்கம் லாஸ் என்பவர் '...... தொடக்கத்திலிருந்து முடிவுவரை ஒரு கதையைக் கூறாத பாடலை நான் கதைப் பாடலாகக் கருதமாட்டேன் ... ...' எனக் கூறுவதாகக் காட்டுவர்[3] இவ்வகையில் தமிழகக் கதைப்பாடல்களை ஆய்ந்த பேராசிரியர் நா. வானமாமலை, மு. அருணாசலம், கி. வா. சகந்நாதன் முதலானோரும் பிறரும் ஏறத்தாழ ஒரு

மித்த கருத்துக்களையே வெளியிட்டுள்ளனர். கதைப் பாடல்கள் குறித்த ஆய்வாளர்கள் பலரது கருத்துகளைத் தொகுத்து நோக்குவோமாயின், இவை

1 ஒரு கதையை மையமாகக் கொண்டவை
2 பாடல் வடிவில் அமைந்தவை
3 மக்கள் முன் எடுத்துரைக்கப் படுபவை
4 நாடக உத்திமுறைகள் அமைந்து காணப்படுபவை
5 ஒருவராலோ, பலராலோ பாடப்படுபவை

எனச் சுட்டலாம்.

இலக்கியங்களில் கதைப் பாடல்கள்:

சங்கப் பாடல்கள் அனைத்தும் உதிரிப் பாடல்கள். அவற்றிலும் புராண, இதிகாசக் கதைகளின் கூறுகள் சில விரவிக் காணப் படுகின்றன. ஆயினும் அவைகள் கதைப்பாடல்களல்ல. மாறாக கலித்தொகை போன்ற நூல்களின் சில பாடல்களில் கதை யமைப்பின் போக்கும் காணப்படுகிறது. இதற்குச் சான்றாக கபிலரின் குறிஞ்சிக்கலிப் பாடல் ஒன்றைக் காட்டலாம்.

தலைவன் ஒருவன் யாசிப்பவன்போல் மாறுவேடத்தில் வந்து தன் கையைப் பிடித்ததையைத் தோழியிடம் கூற வந்த தலைவி,

'சுடர்த்தொடிஇ கேளாய் ... ...'[4]

என விளித்துக் கதை கூறத் தொடங்குகிறாள். இப்பாடல் சிறந்த ஒரு சிறுகதை அமைப்பைப் பெற்றிருக்கக் காணலாம்.

பதினெண் கீழ்க்கணக்கில் கதைக் கூறுகள்:

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான பழமொழி நானூற் றின்கண் கதைக்கரு சுருங்கி — எடுத்துக்காட்டுகளாக கருத்தை விளக்க வருவதையும் காணமுடிகிறது. இதற்குச் சான்றாக,

'பொலந்தார் இராமன் துணையாகத் தான்போந்து
இலங்கை கிழவற்(கு) இளையான் — இலங்கைக்கே
போந்(து) யாயதூஉம் பெற்றான் பெரியாரைச்
சார்ந்து கெழி இயிலார் இல்.'[5]

எனும் பாடலைக் காட்டலாம். அதாவது பெரியோரைச் சார்ந்து ஒழுகுபவர் பயன் பெறுவர் என்பதை விளக்க வந்த பழமொழி

ஆசிரியர் வீடணன் இராமனுடன் சேர்ந்தமையை எடுத்துக் காட்டாக அமைக்கிறார். இதன்கண் கதைக்கூறு அமைந்துள்ளதே யன்றி, கதைப்பாடற் கூறு அமையவில்லை என்பது நினையத்தக்கது.

சிலப்பதிகாரம்—ஒரு கதைப்பாடல்:

சிலப்பதிகாரச் செய்தியை இளங்கோவடிகள் கதையாக மக்கள் மத்தியில் கூறியிருக்கிறார். இதற்கான அகப்புறச் சான்றுகளும் உண்டு. கதை கூறுபவர்கள் கதையுடன் ஒன்றி விடுகின்ற காரணத்தால், தன்னையும் கதாபாத்திரங்களுள் ஒருவராக இணைத்து விடுவது உண்டு. இவ்வகையிலே இளங்கோவடிகள் சிலப்பதிகாரக் கதையுடன் ஒன்றி கதை கேட்கும் மக்களிடம்,

'யானும் சென்றேன் என்னெதிர் எழுந்து
... ...
என் திறம் உரைத்த இமையோர் இளங்கொடி''

எனக் குறிப்பிடுகின்றார்.

கதை கேட்ட மக்களைப் பார்த்து,

'தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
... ...'[7]

என அறமுரைக்கிறார். இவ்வகைச் சான்றுகளால் சிலப்பதிகாரம் ஒரு கதைப்பாடல் நூல் என்பது விளங்கும்.

அடியார்க்கு நல்லாரும் சிலப்பதிகாரத்தைக் கதை என்றே குறிக்கிறார். இளங்கோவடிகள் மங்கல வாழ்த்துப் பாடலில் கண்ணகியை முதலாவதாக அறிமுகப் படுத்தியதற்குக் காரணம் கூறவந்த அடியார்க்கு நல்லார், 'இவளை முன் கூறிற்று; கதைக்கு நாயகியாதலின்'[8] என விளக்கம் தருகிறார். மேலும் இவர் தரும் 'கதையையுடையது காதையாம்'[9] எனும் விளக்கமும் புறச் சான்றாய் அமைந்து சிலப்பதிகாரத்தை ஒரு கதைப் பாடல் நூலாக அறிமுகப்படுத்தும்.

மேற்கண்ட விளக்கங்களால் நமக்குக் கிடைக்கும் முதற் கதைப் பாடல் நூல் சிலப்பதிகாரம் எனவும், அக்கதை மக்கள் மத்தியில் கதா காலட்சேபம் போல் உரைக்கப்பட்டு வந்தது எனவும் அறிய முடிகிறது.

பெருங்கதை

கதை எனும் பெயரைப் பெற்று முதன் முதலாகக் கிடைக்கும் கதைப் பாடல் நூல் பெருங்கதையாகும் பெருங்கதையானது, கதையுரைக் கெல்லாம் காரண[10]மாக அமைந்ததனால் இப் பெயர் பெற்றது.

பிற கதைப் பாடல்கள்:

சீவக சிந்தாமணி சீவக நம்பியைச் சுற்றி எழுந்த கதைப் பாடலாகும். இதனைப்போன்றே கம்பராமாயணமும் அமையும். பெரிய புராணம் ஒரு கதைப் பாடல் நூல் என்பதனை,

'எடுக்கு மாக்கதை ... ...[11]

என்ற பாயிரச் செய்யுள் உணர்த்தும்.

சிற்றிலக்கியங்கள்:

உழத்திப்பாட்டு, ஊஞ்சல், ஏற்றப்பாட்டு, ஓடப்பாட்டு, கீர்த்தனை, குறத்திப்பாட்டு, குறவஞ்சி, பள்ளு, அம்மானை முதலான சிற்றிலக்கியங்கள், பலவற்றுள்ளும் கதைப்பாடல் இயல்புகள் காணப்படுகின்றன. இவற்றைப் பிரித்துணர்ந்து நாட்டுப் புறக் கதைப்பாடல்களுடன் ஒப்பு நோக்க வேண்டும்.

நாட்டுப்புறக் கதைப் பாடல்கள்:

நாட்டுப்புற இலக்கியத்தின் ஒரு கூறாக அமைபவை நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் பதிப்பிக்கப் பட்ட கதைப்பாடல் நூல்களை 112 ஆகக் காட்டுவார் ஆய்வாளர் ஒருவர்.[12] பதிப்பிக்கப்பட வேண்டிய நூல்கள் எண்ணற்றவை.

பிறகதைப் பாடல்களுடன் ஒப்பிடும்போது நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் அடிப்படையில் வேறுபட்டு அமைகின்றன. அதாவது பிற கதைப் பாடல்களுக்கு ஆசிரியர் கிடையாது. ஆயினும் இவை ஆரம்ப நிலையில் ஒரு ஆசிரியனால் படைக்கப்பட்டு, பிறகு பொது நிலையில் உருவாகுவன. மாறாக தனி ஒரு புலவனால் படைக்கப்பட்டு, மாற்றம் பெறாமல் வழங்கப்படுமேயானால் அது நாட்டுப்புறக் கதைப்பாடலாகாது என்பதும் கருதத்தக்கது.

இதுகாறும் கதைப்பாடல்களின் தோற்றம், வளர்ச்சி, வாழ்வு, பயன் முதலியன குறித்து இலக்கிய வரலாற்றுக் கண்ணோட்டத்தில் கண்டோம்; இதனால் சிலப்பு மக்கள் மத்தியில் கதையாக வழங்கப்பட்ட கதைப் பாடல் நூல் எனவும் அறிய முடிந்தது. இவ்வாய்வு நாட்டுப்புறக் கதைப்பாடல்களின் தோற்றம்,

வளர்ச்சி, இயல்பு, பயன், பதிப்புமுறை, பதிப்பின் தேவை முதலியன பற்றிய ஆய்வு தனியே நிகழ, ஒரு தோற்றவாயாக வும் அமைகிறது.

பின் குறிப்புகள்.

1. நக்கீரனார் (உரை), களவியல் என்ற இறையனார் அகப் பொருள், கழகம், சென்னை-1, இரண்டாம் பதிப்பு, 1958, ப-ம். 32.
2. வையாபுரிப் பிள்ளை எஸ், 'கதைப்பாட்டு', தமிழர் பண்பாடு, தமிழ்ப்புத்தகாலயம், சென்னை-5, எட்டாம் பதிப்பு, 1974, ப-ம் 72.
3. லூர்துதே, 'கதைப் பாடல்களின் இயல்புகள்', தமிழ்நாட்டுப் புற இயல் ஆய்வு, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம். சென்னை—20, 1979, ப-ம் 337-'38,
4. கபிலர், 'குறிஞ்சிக் கலி', கலித்தொகை கழகம், சென்னை-1, ஐந்தாம் பதிப்பு, 1958, பா. எண். 15.
5. முன்றுறையரையனார், பழமொழி நானூறு, கழகம், சென்னை—1, இரண்டாம் பதிப்பு, 1074, பா, எண், 258.
6. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், டாக்டர் உ. வே. சாமி நாதய்யர் (பதிப்பு), கபீர் அச்சுக்கூடம், சென்னை, ஏழாம் பதிப்பு, 1960, 30: 171—183.
7. ———, சிலப்பதிகாரம், 30; 180—'86
8. ———, சிலப்பதிகாரம், ப-ம், 34.
9. ———, சிலப்பதிகாரம், ப-ம், 25.
10. கொங்குவேளிர், இலாவண காண்டம், பெருங்கதை மூலமும் உரையும், டாக்டர் உ, வே. சாமிநாதய்யர் (பதிப்பு), கபீர் அச்சுக்கூடம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1953, 11: 80.
11. சேக்கிழார், பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணம், கோவைத் தமிழ்ச்சங்கம், கோயம்புத்தூர் 1935, பா. எண்-3,
12. சண்முகசுந்தரம் சு, 'தமிழில் நாட்டுப்புற இயல்நூல் — கட்டுரை அடைவு', தமிழாய்வு தொகுதி 4, சென்னைப் பல்கலைக் கழகம், 1975, ப-ம் 46.

தமிழ் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

மாண்புமிகு

மா. கோ. இராமச்சந்திரன்

அவர்கட்குத்

திருச்சியில் 24—5—1981-இல்

நிகழ்ந்த பாராட்டு விழாவின்போது

தஞ்சைக் கரந்தைத்
தமிழ்ச் சங்கத்தார் சார்பில்
உவந்துரைத்த

பாராட்டியல் வாழ்த்திதழ்.

(1)

நானிலத்தை ஐந்திணையா வகுத்து வாழ்வை
நாகரிகம் மேவஅகம் புறமாச் செய்து

மானிடத்தின் பண்பாட்டை வளர்த்த றத்தின்
வழியணுகும் பொருளின்ப நுகர்ச்சி கூட்டும்

தேனிழைத்த செந்தமிழாற் சிறக்கும் சேரர்
செம்பியர்பாண் டியர்புரந்த தமிழகத்தின்

மேனிலைமேன் மேலுயரக் காவல் பூண்டு
வியந்துலகம் பாராட்ட ஆட்சி செய்யும்

(2)

பொன்மனச்செம் மால்!''புரட்சித் தலைவ''னென்று
புகழ்ந்துபுவி போற்றிசெய மக்க ளுக்குத்

தன்மைமிகத் தொண்டாற்றும் சால்பு மிக்கோய்!

தமிழ்நாடு பெற்றதவச் சேயே! நாட்டின்

நன்மையொன்றே குறிக்கோளாச் செங்கோல் தாங்கும்
நறுங்குணத்தோய்! தமிழ்புரந்த மூவேந்தர்தாம்

வன்மையொடிங் கோருருவாய் வந்த தொப்ப
வண்டமிழ்ச்சீர் பரப்பியிசை வளர்க்கும் மன்னா!

(3)

தண்டமிழ்ப்பண் பாடுயர்த்தும் தக்கோய்! ''ராமச்
சந்திர'' னென் றுலகேத்தத் திகழ்வோய்! ஏழு
கண்டமுஞ்செந் தமிழ்மாண்பைக் கண்டு போற்றக்
காண்டகஜந் தாப் உலகத் தமிழ்மா நாட்டை
மண்டுபுகழ்க் கூடலிலே கூட்டித் தென்னர்
மதிப்புயர்த்த கோவே! கோ, இராமச் சந்த்ர!
எண்டிசையும் புகழ்கமழ இன்பம் ஓங்க
இயலிசை நாடகத்தமிழ்போல் என்றும்வாழ்க!

(4)

பெரியாரின் பூட்கையொடு அறிஞர் அண்ணா
பெருவேட்கை செயலாகிப் பிறங்கும் வண்ணம்
சரியான பணிபுரிந்தத் தலைவர் மாண்பைத்
தரணியறிந் திடவிளக்கும் தலைவ! எங்கள்
மரியாதைக் குரியபெருங் கோவே! யார்க்கும்
வரையாது வழங்கியுளம் மகிழும் வள்ளால்!
பரிவோங்கத் தேசியத் தலைவர் கட்கும்
பைந்தமிழ்மாப் புலவோர்க்கும் விழாக்கள் செய்வோய்!

(5)

ஆழ்ந்தகன்ற முத்தமிழ்கூர் கலைவ ளத்தை
அருந்தமிழ்ப்பல் கலைக்கழக மமைத்துக் காணச்
சூழ்ந்தபுகழ்த் தஞ்சையிலே தொடங்கி, எங்கள்
தூய்தமிழ வேள்உமாம கேசனாரின்
ஆழ்ந்தகனா நனவாகச் செய்யும் அண்ணால்!
அணிகரந்தைத் தமிழ்ச்சங்கத் தேம்உன் னன்பால்
வாழ்ந்துபுக ழோங்கநனி தமிழ்த்தாய் போற்றி
வாழ்த்துகிறோம் பல்லாண்டு வாழி! வாழி!!

இங்ஙனம்,

திருச்சிராப்பள்ளி
24—5—1981

கரந்தைத் தமிழ்ச்சங்கத்தார்
தஞ்சை.

செய்யுள் நாடகம்

அன்னி மிஞிலி - ஓர் ஆய்வு

நெல்லை ந. சொக்கலிங்கம்,
எம். ஏ. டி. ஜி. டி.,
அஞ்சல்வழிக் கல்வித்துறை,
ம. கா. பல்கலைக் கழகம்
மதுரை-21.

முன்னுரை :

கவிஞர் திரு. மு. உலகநாதன், அன்னிமிஞிலி என்னும் கவிதை நாடகத்தை ஆசிரியப்பாவில் 4699 அடிகளில் படைத்துத் தந்துள்ளார். நான்கு அங்கங்களை உடையது. இது அவற்றுள் இரண்டும் மூன்றும் ஐந்து களங்களையும், ஒன்றும் நான்கும் ஆறு களங்களையும் கொண்டு விளங்குகின்றன. இக் கவிதை நாடகம் சங்க இலக்கியப் பின்னணியைக் கொண்டு தமிழர் பண்பாட்டை விளக்கும் இனிய நூலாக விளங்குகின்றது, வரலாற்றுப் புலவராகிய பரணரின் பாடல்களில் (அகம்: 196, 262) பயின்றுவரும் செய்திகளின் அடிப்படையில் இலக்கியப் புனைவு நாடகத்தை ஆசிரியர் மு. உலகநாதன் இயற்றியுள்ளார்.

வடிவமைப்பு :

நாடகங்களின் வடிவமைப்பு அகவமைப்பு, புறவமைப்பு என இரண்டு வகைப்படும்.

நாடக வடிவமைப்பு

அகவமைப்பு	புறவமைப்பு:
[நாடகத்தை, பொருள், கட்டுக்கோப்பு. (அல்லது கதைப்பின்னல்) பாத்திரப் படைப்பு, சுவைகள் இன்னபிற பிரிவுகள்]	[நாடகத்துள் நாடகம், யாப்பமைதி, உரையாடல், அசைவுக்காட்சி இன்னபிற]

அகவல் நடை :

அன்னிமிஞிலி நாடகத்தில் அமையும் புற அமைப்புக்களை முதற்கண் காண்போம். மனோன்மணீயம் நாடகத்தில், நாடகத்துள் நாடகமாக (Play in a Play) சிவகாமி சரிதை அமைகின்றது: அதனைப்போன்று ஏதும் அன்னிமிஞிலியில் அமையவில்லை என்பது தெளிவு. இந் நாடகத்தின் தமிழ்த்தாய் வாழ்த்து மூன்று அறுசீர் ஆசிரிய விருத்தங்களைக் கொண்டது. தொடர்ந்து வருகின்ற களங்கள் எல்லாமே அகவல் நடையில் அமைந்துள்ளன. அகவல் நடை எளிய நடையாகும்: "மிகுதியான கவிதை நாடகங்களில் சுமார் 75 விழுக்காட்டுப் பகுதிகள் ஆசிரியப்பாவில் அமைந்துள்ளன. உரையாடலில் எளிதாகக் கருத்துக்களைப் புகுத்திக் கதையை வளர்த்திச் செல்வதற்கு இந்தப்பாவின் அமைப்பு உதவும் படியாக உள்ளது என்பதை அனுபவத்தால் அறியமுடிகின்றது"[1] என்று திறனாய்ந்து கூறுகின்றார் 'பால்மதி' போன்ற பைந்தமிழ்க் கவிதை நாடகங்களை இயற்றி வெளியிட்டுள்ள டாக்டர் ஏ. என். பெருமாள் கருத்துச் செறிவுகளைச் சொல்வதற்கு எளிய ஊடகமாகிய அகவற்பா நடையையே, அன்னிமிஞிலி ஆசிரியரும் பயன்படுத்தியுள்ளமை போற்றத் தக்கதாக வுள்ளது. எதுகை மோனைகள் அமைய ஏற்றதாக உள்ள அகவல்நடை அன்னிமிஞிலி ஆசிரியருக்கு மிகுதியும் கைகொடுத்து உதவுகின்றது என்று கூறலாம்.[2]

நாடகத்தின் புறவடியில் அமையும் அங்கம், களம் என்றும் பிரிவுகள் குறித்து நாடகவியலில் (நூற்பா : 189) பரிதிமாற் கலைஞர் கூறுவார். அதனில் பிறழாமல் அன்னிமிஞிலி ஆசிரியர் அமைத்துச் செல்கின்றார் 'பொதுவாக ஒரு இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளைக் களம் என்று கூறலாம். இதுவே மேனாட்டு இலக்கணத்துக்கு உடன்பாடு. பெரும்பாலும் தமிழ்க் கவிதை நாடகங்களில் வந்துள்ள சிறு பிரிவுகள் இவ்விதிக்கு ஒத்தே உள்ளன.

அன்னிமிஞிலியில் அமையும் உரையாடல்களில் ஏற்றத்தாழ்வுகள் ஏதும் காணமுடியவில்லை. எருமையன், கூகையன், மற்றும் ஏவலர்கள் பேசும் பேச்சுக்களில் கூட நடைச்செழுமை காணப்படு

---

1. பெருமாள் ஏ. என். கவிதை நாடகம், தமிழ் இலக்கியக் கொள்கை தொகு—3. உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை பக் : 291.
2. மேற்படி நூல், பக் : 289.

கின்றது. புலவர்கள் கருவூர்க் கோசரும், மையோடக் கோவனாரும் செந்தமிழ் நடையிலேயே பேசுவர். அதே போன்றே அன்னிமிஞிலி நாடகத்துள் வரும் ஏவலர்களின் பேச்சும் அமைகின்றது. ஒரே சீரான நடையமைவதனைவிட, பாத்திரங்களுக்கு ஏற்ற நடை அமையுமென்றால் அன்னிமிஞிலி நாடகம் இன்னும் சிறந்து விளங்கும் எனக் கருத இடமிருக்கின்றது.

குதிரையில் இருவர் உரையாடிக்கொண்டு செல்வதுபோன்று ஒரு களம் அமையுமென்றால் அது அசைவுக்காட்சி என்று கூறப் படும். அத்தகைய காட்சிகள் எதுவும் அன்னிமிஞிலி நாடகத்தில் இல்லை என்று துணிந்துரைக்கலாம்

அகவமைப்புகள் :

நாடகக் கதையினை ஐந்து வகையாகப் பகுக்கின்றனர். (1) வரலாற்றுக் கவிதை நாடகம், (2) இலக்கியக் கவிதை நாடகம், (3) சமுதாயக் கவிதை நாடகம், (4) கற்பனை அல்லது தத்துவம் முதலானவை பற்றிய கவிதை நாடகம் எனப் பகுத்துரைப்பர்.[3] இப்பகுப்பின் அடிப்படையில் அன்னிமிஞிலி நாடகம் இலக்கியத்தில் வரும் செய்தி ஒன்றை அடிப்படையாக வைத்துப் பின்னப்பட்ட நாடகம் என்பதனால், இது இலக்கியக் கவிதை நாடகம் என்னும் வகையுள் அடங்கும் எனலாம். அக நானூற்றில் பயின்று வருகின்ற செய்திப் பின்னணியைக் கொண்டு அன்னிமிஞிலியை ஆசிரியர் படைத்துள்ளார். அகநானூற்றுப் பாடல்களில் (196, 262) வரும் திதியன், அன்னிமிஞிலி, குறும் பியன் ஆகிய பெயர்களை வைத்துக் கொண்டு பிற சங்க காலப் பெயர்களையும் துணையாகக் கொண்டு நாடகக் கருவை வளர்த் துள்ளனர்.

தமிழ் இலக்கணம் கூறும் உறுதிப் பொருள்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்காகும். அறமும் இன்ப மும் இந்நாடகத்துள் இனிது கூறப்படுதல் ஒருதலை

கதைப்பின்னல் :

நாடகங்கள் தொடக்கம், சிக்கல், உச்சநிலை, வீழ்ச்சி, முடிவு ஆகிய ஐந்து நிலைகளை உடையனவாக விளங்குதல் வேண்டும். இவற்றைப்பற்றிக் கூறவந்த பரிதிமாற் கலைஞர்,

---

3 குமரவேலன், இரா., 'கவிதை நாடகம்—ஒரு கண்ணோட்டம்,' அரசு பதிப்பகம், சென்னை-92, பக்: 19.

''இடைப் பொருளுடனே யெடுத்த கதையின்
றலைப்பொருள் சார்ந்து தழைத்து முதிர்வது
நாட்டியக் கட்டுரைச் சந்தியாம்; அதுதான்
முகமே, பிரதி முகமே, கருப்பம்;
விளைவு, துய்த்தலோடு ஐவகை யாகும்''4

என்கின்றார்.



1) தொடக்கம் அல்லது முகம்
2) சிக்கல் அல்லது பிரதிமுகம்
3) உச்சநிலை அல்லது கருப்பம்
4) வீழ்ச்சி அல்லது விளைவு
5) முடிவு அல்லது துய்த்தல்

என்ற வரைபடத்தின் மூலம் ஒரு கவிதை நாடகத்தின் ஐந்து நிலைகளை விளக்கிக் காட்டலாம்,

அன்னி மிஞிலி நாடகத்தின் தொடக்கம் திதியனின் அரண்மனையில் நிகழ்வதாக உள்ளது. ஒற்றர் படைத்தலைவன் குறும்பியன், முன்னணிப் படைத் தலைவன் அஞ்சி ஆகிய மூவரின் உரையாடலாகத் தொடங்குகின்றது. நாடகத் தொடக்கம் மக்கள் உள்ளத்தில் கிளர்ச்சியை உண்டுபண்ணுவதாக அமைதல் சிறப்பாகும். மேற்கண்ட மூவரின் உரையாடலில் அன்னியூர்த் தலைவன் அன்னிபற்றியும், அவனுடைய ஆக்களை பற்றியும் பேச்சு நிகழ்கின்றது. இக்கவிதை நாடகத்தின் சிக்கலுக்கு அடிப்படை ஆக்களே ஆகும். திதியன், ஐந்நூறு ஆக்களைப் பெற்றுவரும் வண்ணம் ஆணையிடுவதன் உட்பொருளே இக்கவிதை நாடகத்தின் சிக்கலுக்குரிய நிலைக்களனைத் தோற்றுவாய் செய்வதற்குத்தான் என்று கருதலாம், இவ்வாறு தொடங்கும் இந்நாடகம் இயல்பான தொடக்கத்தை உடையதாக அமைந்து, கற்பவர் உள்ளத்

4. சூரியநாராயண சாத்திரியார், வி, கோ., நாடகவியல், நூற்பா: 32.

தைக் கவர்கின்றது எனலாம். இதனை அடுத்து வருவது நாடகத்தின் சிக்கலின் தோற்றம், திதியனின் ஆணையை ஏற்றுவந்த குறும்பியனும் அஞ்சியும் அன்னியிடம் ஐந்நூறு பாற்பசுக்களை வேண்டினர். தெரிவு செய்யப் பெற்றிருந்த ஐந்நூறு ஆக்களையும் கோசர் குலத்தின் இளவல்களாகிய இனியனும் வலியனும் தங்களின் பயிர்களை மேய்ந்தன என்று வலியப் பற்றிச் சென்றனர். இங்கேதான் சிக்கல் முளைவிடுகின்றது. இக்குழப்பத்திற்குக் காரணம் இனியன், அன்னியின் மகள் மிஞிலியை விரும்பி வழி மறித்தான்; அவளைக் காதலிக்கும் குறும்பியனால் நன்கு உதைக்கப்பட்டான் என்பதே! குறும்பியன், அஞ்சி இவர்களுடைய ஆற்றலைக் கண்ட மிஞிலியும் அன்னியின் வளர்ப்பு மகள் மதியொளியும் முறையே குறும்பியனையும் அஞ்சியையும் காதலிக்கின்றனர். சிக்கல் வளர்ச்சியின் ஊடேயே காதற்பயிரும் வளர்கின்றது.

மூன்றாவது உச்சநிலை என்பது திடீர் நிகழ்ச்சியாக அமையவில்லை. இனியனை வஞ்சகனாக—முரணனாக (Villain) ஆசிரியர் அறிமுகம் செய்வதிலிருந்து, அன்னிக்கு இவனாலேயே பேரிடர் வரப்போகிறது என்ற எண்ணம் நம் நெஞ்சில் கால் கொள்ளுகின்றது. சாம்பன், ஐந்நூறு ஆக்களுக்கு ஏற்பட்ட இடுக்கண்களை எடுத்துச் சொன்னான். நீதி கேட்கச் சேவூரின் தலைவன் குமரனைக் காணச் சென்றனர். அன்னியும் குறும்பியனும் அஞ்சியும். இனியன்தான் வாய்மொழிக் கோசரின் அவையிலே தீர்ப்பளிக்கும் வல்லடி வழக்குத் தலைவன். அவன் முதுகோசனின் செல்லப்பிள்ளை ஆவான். நடுநிலை கொண்டு தீர்ப்புச் சொல்ல வேண்டிய குமரன், இனியனையே முழுதும் பேச அனுமதிக்கின்றான். அதன் விளைவாக வாய்ச்சண்டை ஏற்பட்டு வாள் சண்டையாக முற்றுகின்றது. வலியனால் அன்னியின் கண்கள் பறிக்கப்பட்டன அஞ்சியின் வாள் வலியனின் இடக்கையைப் பறிக்கின்றது. இனியன், இதற்கிடையில் ஐந்நூறு ஆக்களுக்கும் நச்சு நீரைக் கொடுத்துக் கொன்று விடுகின்றான். இவ்வாறு அன்னிமிஞிலி நாடகத்தில் வரும் ஆக்களின் நிலையால் எழுந்த சிக்கல் வளர்ந்து முற்றும் நிலையில் மிஞிலி சூளுரை அமைகின்றது.

உச்சநிலை யடைந்த குழப்பம் அல்லது சிக்கல் வீழ்ச்சி நிலையை நோக்கிச் செல்வது நான்காவது நிலையாகும், அதாவது சிக்கல் விடுவிப்பாகும். மிஞிலியின் சூளுரையினால் சிக்கலுக்கு ஒரு முடிவு ஏற்படுகின்றது. தன் தந்தையின் கண்களைப் பறித்ததோடு திதியனுக்கு எனத் தேர்ந்து வைத்திருந்த ஐந்நூறு

ஆக்களையும் நஞ்சூட்டிக் கொன்றமைக்காகக் கோசர் குலத்தைக் கூண்டோடு அழிப்பேன்; அதுவரை கலத்தில் உண்ணேன்; கண்களும் உறங்கேன்; என்கிறாள், மிஞிலி.

''ஆடை அணிமணி-அழகென எதையும்
அதுவரை புனையேன்; அன்னை ஊட்டும்
புதுநெய் மணக்கும் மதுநிகர் உணவைக்
கலத்தினில் உண்ணேன்! கண்களும் உறங்கேன்
எண்ணிய எண்ணியாங் கெய்தும் வரையில்
மண்ணில் மற்றொரு மகிழ்ச்சி இல்லை!
ஒய்வும் இல்லை; ஒழிவும் இல்லை''

[அங்: 2; களம்: 4; 51—57]

என்பதே அவள் சூளுரையாகும். கோசர் குலத்தை வேருடன் அழிக்கும் இச்சூளுரையின் வெற்றிக்குத் திதியனின் துணை தேவையாகின்றது. அன்னி, மிஞிலி ஆகியோர் திதியனிடம் முறையிடுகின்றனர். சோழன் திதியன் வெகுண்டெழுந்து இனியனைப் போருக்கு அழைக்கின்றான். மிஞிலியின் காதலன் குறும்பியன் இனியனை வீழ்த்துகின்றான். வலியனை, அஞ்சி தன் வாளுக்கு இரையாக்குகின்றான். மிஞிலியின் சூளுரை வெற்றிப் பெறுவதோடு எதிர் நிலைத் தலைவனால்-இனியனால் ஏற்படுத்தப் பட்ட குழப்பம் அல்லது சிக்கல் ஒருவாறு அவிழ்க்கப்படுகின்றது.

இக்கவிதை நாடகத்தின் முடிவு மிஞிலியின் சூளுரை வெற்றி பெறுவதே ஆகும். முரணனும் அவனைச் சார்ந்தோரும் வீழ்ச்சியடைவதனைக் காண்கின்றோம். அவர்தம் வீழ்ச்சிக்கு நாம் கழிவிரக்கம் கொள்ளவில்லை. அவர்களுக்கு வரவேண்டிய முடிவே இது என்ற முடிவிற்கே வருகின்றோம். அன்னியின் கண்கள் மருத்துவர்களால் குணப்படுத்தப்படுகின்றன. அவனுடைய பார்வை தெரிகிறது. சோழன் திதியன் முன்னிலையில் குறும்பியன்—மிஞிலி அஞ்சி—மதியொளி ஆகியோரின் திருமணம் நிறைவெய்துகின்றது. இவ்வாறு அன்னி மிஞிலி நாடகக் கதைப் பின்னல் அமைந்துள்ளது எனலாம்.

நாடகத் தொடக்கமும் முடிவும்:

அன்னிமிஞிலி நாடகத் தொடக்கம் திதிய மன்னனின் அரண்மனையில் நிகழ்கின்றது. 154 அடிகளில் இக்களம் அமைகின்றது. திதியனும் குறும்பியனும் அஞ்சியும் பேசுவதாக அமைந்துள்ளது. இம்மூவரின் பேச்சும் அன்னியைப் பற்றியும், அவனுடைய ஆநிரைகளைப் பற்றியும் அமைகின்றன. நாடகத்தின் உயிர் முடிச்சு முதற் காட்சியில் குறிப்பாகச் சுட்டப்படுதல் வேண்டும்

என்பர். அதற்கொப்பவே, அன்னியின் பசுக்களைப்பற்றிய குறிப்புக்கள் முதற்கண் விரிவாகப் பேசப்பட்டன. நம் கருத்தை ஈர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஆசிரியர் உலகநாதன், அன்னியையும் அவள் ஆநிரைகளையும் அறிமுகம் செய்து வைக்கின்றார். இம்முதற் களத்தில் இது முதற்காட்சியின் தலைமைச் சிறப்புக்களில் ஒன்றாகும். ஒரு பரந்த நாட்டின் தலைவனாகிய திதியன் அன்னியைக் குறித்துப் பேசுவதன் மூலம் அவனைச் சுற்றி இக்கதை நடைபெறப் போகின்றது என்ற எண்ணம் நம் நெஞ்சில் துளிர்க்கின்றது.[5]

மேலும் இம் முதற்களத்தில் பின்னால் நிகழப்போகும் முக்கிய நிகழ்ச்சிகளுக்குக் கால்கோல் நடைபெற்று விடுவது கண்கூடு. அன்னியைப் பற்றிய உயர்ந்த எண்ணத்தை நம் உள்ளத்தில் இக்களம் ஏற்படுத்தி விடுகின்றது என்றும் கூறலாம்.

வஞ்சகச் செயல்கள் வீழ்ச்சியுறுகின்றன. இறுதியில் மிஞிலியாகிய நாடகத் தலைவியின் திருமணம் இனிது முடிகிறது அன்னியும் இழந்த கண்களைப் பெறுகின்றாள் இத்தகைய இனிய முடிவை அன்னிமிஞிலி நாடகம் பெறுவதனால், இது 'நற்பொருளிறுதியை[6] உடையதாகின்றது.

நாடக மேற்கோள்கள்:

கவிதை நாடகங்களின் முன்னோடியாகிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளை மனோன்மணீயத்துள் புராணக் குறிப்புக்களையும், திருக்குறள், பழமொழி ஆகியவற்றையும் பயன்படுத்தியுள்ளார். அவர் வழியிலேயே பின்னர் வந்த கவிதை நாடக ஆசிரியர்களும் சென்றனர். அவ்வழியிலே அன்னிமிஞிலி ஆசிரியரும் சென்றுள்ளார் என்பதனைச் சில சான்றுகளைக் கொண்டு அறிந்துகொள்வோம், திருக்குறட் கருத்துக்களைப் பல இடங்களில் ஆசிரியர் பயன்படுத்தியதோடு, அமையாது, சங்க இலக்கியத் தொடர்களையும் கருத்துக்களையும் பயன்படுத்தியுள்ளார்.

---

5 "The opening scenes of a play are of paramount importance, since they define the situation from which the whole action will grow. and establish the central concerns of the play by focusing our attention."

—Dawson. S. W., Drama and the Dramatic, The Critical Idiom Series, Page: 37.

பெண்கள் வயது வந்த நிலையில் அவர் தம் பெற்றோர் இவர்களுக்குத் திருமணம் செய்து வைக்க முனைதல் வேண்டும் என்பதனை வலியுறுத்தும் பொழுது, அன்னியிடம் கண்மணி,

''அடங்கி ஒடுங்கி ஆமைகள் போல
வீட்டில் கிடப்பதை விரும்ப வில்லை''
(1: 3: 71-72)

என்று கூறுகின்றாள். இவ்வடிகள்,

''ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்புடைத்து''
(குறள்: 126)

என்ற குறளின் கருத்தை எதிரொலிக்கின்றது.

மிஞிலி வீரமும் அறிவும் மிக்க பெண்ணாக வளர்ந்து வருகின்றாள். செந்தமிழ்க் குலத்தின் சிறப்பைக் காக்க இறப்பே வந்தாலும் இன்னுயிர் கொடுத்தும் காப்பேன் என்றுள் தந்தையிடம். அப்போது, அன்னி, மகன் இல்லாத குறையைத் தீர்த்து வைத்த மகள் மிஞிலியைப் பாராட்டும் பொழுது,

''ஈன்ற பொழுதில் ஈன்றதாய் மகிழ்வாள்;
சான்றோன் என்றால் தந்தை மகிழ்வான்''
(2: 4: 213-214)

என்று கூறி உவப்புறுகின்றாள். அவ்வுவப்புரையில் ஒளிந்திருப்பது,

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்''
(குறள்: 69)

என்ற குறளாகும்.

புலவர் கருவூர்க்கோசர், அன்னி கொடுத்த ஆக்களைப் பெற்று வரும்போது வழியில் இனியனும் வலியனும் காண்கின்றனர்; வம்பு பேசுகின்றனர், அவ்வமயம் புலவர் கருவூர்க்கோசர் அறிவு கொளுத்தும் வகையில்,

---

6. 'நாடகத் தலைவ னன்மணம் புணர்தலும்
ஆடக மணிமுடி யணிதலு மின்னன
பிறவு மாமிவை திறமுற முடிவது
நற்பொரு ளிறுதியா நயந்தனர் புலவர்''
நாடகவியல்: 111

"அல்லற் பட்டே ஆற்றா தழுதிடும்
எல்லாப் பெண்டிரின் இன்கண் ணீரும்
உன்னைச் சுடுமுன் உண்மையில் திருந்து"
(3: 1: 36-38)

என்று பேசுவார். இவ்வரிகளில்,

"அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"
(குறள் : 555)

என்ற குறளின் கருத்து பயின்று வந்துள்ளமை தெளிவு.

புலவர் கருவூர்க்கோசரிடம் அவர் மனைவி பேசும் பொழுது,

"ஈன்று புறந்தரல் என்தலைக் கடனாம்
சான்றோன் ஆக்குதல் தங்களின் கடனாம்"
(1: 4: 102-103)

என்கின்றாள். இவ்வாறு புலவரின் மனைவி மின்மினி பேசுவது,

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே"
(புறம்: 312)

என்ற பொன் முடியாரின் புறப்பாட்டின் கருத்தாகும்.

மிஞிலியின் உருவப்படத்தை இனியன் தீட்டிக்கொண்டிருக்கும் பொழுது அங்கே வலியன் வருகின்றான். அப்போது, வலியன் தான் பட்ட அடியை நினைந்து வருந்துவான் போலப் பேசுகின்றான். எதிரிகளாலே இடக்கையினை இழந்து தவிக்கும் வலியன்,

"... ... ... பாயும் புலியை
இடறிய செயலாய் ஏதோ நினைத்துப்
படவே வேண்டாப் பலதுயர் பட்டோம்"
(3: 3: 2-4)

என்று வேதனையுடன் பேசுகின்றான் இது,

"துஞ்சுபுலி இடறிய சிதடன் போல"
(புறம்: 73)

என்ற தொடரின் மறுபதிப்பாகும் என்று தெரிந்து கொள்ளலாம். சங்கநூல் கருத்துக்கள் மட்டுமல்லாமல், பிற்கால நூற்கருத்துக்

களையும் கூடப் போற்றிப் பயன்படுத்தியுள்ளார். ஒரே ஒரு சான்று காண்போம்.

நூற்றுவர் தலைவனாகிய துரியோதனன் விதுரனைப் பார்த்துப் பேசுகின்றான். விதுரன் நன்றிகொன்றவனாக விளங்குவதனை வெளிப்படுத்துகின்ற பொழுது,

''நன்றி கெட்ட விதுரா!—சிறிதும்
நாண மற்ற விதுரா!
ஐவருக்கு நெஞ்சும் — எங்கள்
அரண்ம னைக்கு வயிறும்
தெய்வ மன்று உனக்கே — விதுரா
செய்து விட்ட தேயோ?''

(பாஞ்சாலி சபதம்)

என்று கேட்பதாகப் பாரதியார் கூறுவார். பாஞ்சாலீ சபதத்தில் ஈடுபாடு கொண்ட அன்னிமிஞிலி ஆசிரியர் உலகநாதன், வலியன் தனக்கு அறிவுரை கூறவந்தவிடத்து இனியன் பேசுவதாக எழுதும் பொழுது,

''உண்பது கோசரின் உணவே ஆகும்!
உடுப்பது கோசரின் உடையே ஆகும்!
எண்ணம் மட்டும் எம்மை விடுத்தே
அன்னியின் பக்கமா?''

[3: 3: 105-108]

என்று பேசுவார். இவ்வாறு திருக்குறட் கருத்துக்களையும், பிற நூற் கருத்துக்களையும் ஆங்காங்கே மேற்கோளாகக் கையாண்டு தம்முடைய பன்னூற் பயிற்சியைப் புலப்படுத்துகின்றார்.

பழமொழிகளைப் பயன்படுத்தல்

பழமொழிகள் நம்முடைய பேச்சிலே கூட அடிக்கடி பயின்று வரும். அப்படியிருக்க, இலக்கியப் படைப்பில் அப்பழமொழி வராமல் இருக்குமா? பழமொழிகளை மேற்கோள் காட்டித் தம்முடைய கவிதை நாடகத்தை மெருகூட்டியுள்ளார் புலவர் உலகநாதன் என்பதனை நூலைக் கற்பவர் நன்கு அறிந்தின்புற முடியும். நம் பேச்சுவழக்கில் உள்ள பழமொழிகளை அப்படியே எடுத்தாளுவதற்குமாறாக இலக்கிய வழக்காக்கிப் பேசுவதே புலவர் தம் இயல்பு.

இனியனும் வலியனும் ஆக்கள் ஐந்நூற்றையும் வஞ்சத்தினால்

வழிமறித்துக் கவர்ந்து போன செய்தியை அன்னியிடம் சாம்பன் கூறவந்தபோது,

''ஆட்டுக் குட்டியை அடித்துத் தின்ன
நோட்டம் விட்ட ஓநாய் ஒன்று
குடிக்கும் நீரைக் கலக்கிய தெதனால்
மடையா?' என்று மற்றதைக் கொன்றதாம்''

(2: 1: 146-149)

என்கின்றான், இது வழக்கில் வழங்குகின்ற பழமொழியின் மறுபதிப்பே! ''ஆட்டுக்கிடாய் மழையிலே நனைகிறதே என்று ஓநாய் வருத்தப்பட்டதாம்!'' என்பது பேச்சுவழக்கு. இவ்வாறு ''அரண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேயாய்த் தெரியும்'', ''எடுப்பார் கைப்பிள்ளை என்பதுபோல'', ''கரைப்பவர் கரைத்தால் கல்லும் கரையும்'' ''ஒண்டவந்த பிடாரி ஊர்ப் பிடாரி தன்னை விரட்டிய கதையாய்'' என்பன போன்ற பல பழமொழிகளைப் பயன்படுத்தி நாடகக் கதைக்கு வலுவூட்டியுள்ளார்.

உவப்பூட்டும் உவமைகள் :

உவமைகள் கருத்தை விளக்க வருவன. சில இடங்களில் அவை அலங்காரமாகவும் அமைதல் உண்டு. உவமைகளில் கற்பனை நயம் ஒளி விடும்; அவை கதைகளைப் புலப்படுத்தும்; உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் தொல்காப்பியர் முதல் இன்றைய புலவர் குழந்தை வரை உவமையின் இலக்கணத்தைக் கூறாதார் இலர். கவிதையின் பொருள் புலப்பாட்டிற்கு ஏற்ப உவமை பிற்காலத்தில் அலங்காரப் பொருளாக வளர்ந்து செழித்திருக்கும் நிலையை நாம் இன்று காண்கின்றோம், உவமை இல்லை என்றால் தம் கவிதை இழுக்குடையது என்று கருதும் நிலை இன்று ஏற்பட்டுவிட்டது. எனவே, அன்னிமிஞிலி ஆசிரியரும் இச்சுழலில் நீந்துகின்றார். அவ்வுவமைகளுள் ஒன்றிரண்டு காண்போம்.

அன்னி தன் மனைவி கண்மணியின் இளமை நலத்தைப்பற்றி வியந்து பேசிக்கொண்டிருக்கின்றான். அப்போது,

''... ... ... உன்றன் இளமையை எண்ணின்
கரும்பினைக் கண்ட கட்டெறும் பெனவே
விருப்பமே மிகுந்திடும்''

(1: 3: 17-19)

என்கின்றான். கரும்பின் இனிப்பை நாடி எறும்பு சுற்றுவது போலத் திருமணம் முடிக்கத் தக்க பருவத்தில் மிஞிலி என்னும்

பெண்ணைப் பெற்ற நிலையிலும் கண்மணியின் இளமை நலம் அன்னியை ஏறும்பாக்கு கின்றதாம். இவ்வுவமையின் பொருத்தம் அறிந்தின்புறத்தக்கதாகும்.

காதலன் காதலியாரின் பிரிவுத்துன்பம் பொறுத்தற்கு அரியது; பெரியது. மதியொளியிடம் அஞ்சி காதலுரை பேசும் பொழுது, பிரிவுத் துன்பத்தைத் தன்னால் பொறுத்துக்கொள்ள இயலாது என்று பேசுகின்றான். அதற்கு அவன் கூறும் உவமை :

''உப்புக் குவியல் ஒருதுளி மழையால்
கரைவதுபோலக் கலங்கி அழியும்;
பிரிவெனும் துன்பம் பெரிதே! பெரிதே!''

[2: 2: 97-99]

என்பதாகும். தன் அன்புக் காதலியை விட்டு ஒரு கணமும் பிரிந்து வாழ இயலாது என்னும் எண்ணத்தை வலியுறுத்த எண்ணிய அஞ்சி, உப்புக் குவியலில் துளி மழை வீழ்ந்தால் கரைவது போலக் கரைந்துவிடும் தன் உள்ளம் என்று கூறுகின்றான். இதனால் அவனுடைய உள்ளக் காதலின் ஆழத்தை இனிதுணர முடிகின்றது. இப்படிப்பல உவமைகளைப் புதுமையாகப் பயன்படுத்தி நாடகக் கவிதையில் விறுவிறுப்பை ஏற்படுத்தியுள்ளார்.

காதலும் வீரமும் :

சங்கச் செய்யுளில் காதலும் வீரமும் கைகோர்த்து நிற்கும், அன்னிமிஞிலி நாடக நிகழ்ச்சியும் சங்க இலக்கியப் பின்னணியில் எழுந்ததே. எனவே, காதலும் வீரமும் இணைந்து இந்நாடகத்தில் வரும் என்று எதிர்பார்ப்பது இயல்பே! மகளுடைய திருமணத்தைப் பேசுகின்ற கண்மணியிடம் காதலுரை பேசுகின்றான் அன்னி என்றால், இளஞ்சிட்டுகளாகிய குறும்பியனும் மிஞிலியும், அஞ்சியும் மதியொளியும் பேசுவதில் என்ன விந்தையிருக்க முடியும்!

''கடைவிழி தன்னில் காதல் தூதைச்
சொன்னவள் தானே''

(1: 3: 141-142)

என்பது அன்னியின் பேச்சு.

ஏறுதழுவும் விழாவின் போது, மதியொளியைத் திருமணம் செய்துகொள்வதாக உறுதி கூறுகின்றான் அஞ்சி. அதற்கு மதியொளி,

"ஒருநொடி நகர்வதே ஓராண்டாக
இருக்கும் போதில் எப்படித் திங்கள்
ஒன்றைப் பொறுப்பது"

(2: 2: 111-113)

என்று வினவுவாள். உடனே அஞ்சி,

"காதலர் தம்மைக் கலங்க வைப்பதே
காலம் இந்தக் காலத்தின் வேலை"

(2: 2: 115-116)

என்று தன் உள்ளக் கொதிப்பை—காதல் வேதனையை வெளிப் படுத்துவாள். இவ்வுரையாடலுடன்,

"ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேட் சென்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு" [றார்

(குறள்: 1279)

என்ற குறளை ஒப்பிட்டுக் காணுதல் வேண்டும்.

அன்னியின் வீரவுணர்வை மஞ்சுவிரட்டுக் குறித்து அவள் பேசுவதிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது. தன்னுடைய ஆக்களைப் பொய்மைச் செயலினால் இனியன் பற்றிச் சென்று விட்டான் என்று கேள்விப்பட்ட அன்னி,

"எடுஎன் வேலை இதுவுண்மை ஆனால்
தடுப்பவர் தம்மின் தலைகளை உருட்டி
நீதியை உலகில் நிலைநிறுத் திடுவேன்;
நீதி குலைந்திட நிலையா வுடலைப்
பேணிக் கிடப்பவன் பேதை யன்றோ!"

(2: 1: 174-178)

என முழங்குவாள்.

நீதி கேட்கப்புறப்படும் பொழுது அஞ்சி

"முரட்டுக் கோசரின் மூக்கணாங் கயிற்றை
இழுத்துப் பிடித்தே இரண்டில் ஒன்றை
இன்றே காண்போம்"

[2: 2: 161-163]

என்று பேசுவதும், வழக்கைக் கேட்கும் முதுகோசன் குமரன்,

"... ... ... விளையாட் டாக
வீரம் தன்னை வேல்கொண் டெறிந்து

காட்டும் வல்லர்; களம்கண் டிட்டால்
ஒட்டிப் பகையை ஒழித்து விட்டே
பிறசெயல் செய்யும் பெற்றியர் எம்மவர்''
(2: 3: 107-111)

எனப் பேசும் போதும் வீரச்சுவை ததும்பி நிற்கக் காண்கின்றோம். இவ்வாறு அன்னி மிஞிலி என்னும் கவிதை நாடகத்தில் குறளும், உவமைகளும் பழமொழிகளும், மெய்ப்பாடுகளும் சிறப்புற அமைந்து சுவை யூட்டுகின்றன.

பாத்திரப் படைப்பு :

நாடகங்களில் வரும் பாத்திரங்களைத் தலைமைப் பாத்திரங்கள் துணைப் பாத்திரங்கள் என்று இருவகைப் படுத்தலாம். துணைப் பாத்திரங்களிலும் தலைமைப் பாத்திரங்களின் வளர்ச்சிப்படி நிலைக்கு உதவுவன சில பாத்திரங்களே. ''தமிழ்க் கவிதை நாடகங்களைப் பொறுத்த வரையில் ஆசிரியர்கள் பாத்திரப் படைப்பில் மிகுந்த அக்கறை காட்டி யுள்ளனர் என்றே கூறுதல் வேண்டும் மேலை நாட்டினரது நாடகங்களைப் போலத் தாமும் சிறந்த நூல்களை இயற்ற வேண்டும் என்ற நோக்கம் கொண்டிருந் தாலும், ஆங்கிலம் முதலான மொழிகளில் புலமை கொண்டிருந் தாலும் நாடகாசிரியர்கள் பாத்திரங்கள் இவ்வாறமைதல் வேண்டும் என்ற கொள்கைகளை நன்குணர்ந்து தம் படைப்புக்களை ஆக்கி யுள்ளனர்''7. என்ற கருத்து இவண் நினையத் தகுவதாகும். அன்னிமிஞிலியில் 19 பாத்திரங்கள் பெயர் சுட்டப்பட்டுள்ளன. சில பாத்திரங்கள் பெயர் சுட்டப்படவில்லை. அவை தூதுவன், வீரர்கள் போன்றோர் ஆவர் இவர்களைத்தவிர ஏனைய பாத்திரங் களுக்குப் பெயர் சூட்டியுள்ளார்.

''பெயர் சுட்டபடும் பாத்திரங்களின் எண்ணம் மிகக்கூடா மலும் குறையாமலும் இருப்பது நல்லது. மனோன்மணீயத்துள் இடம் பெறும் மொத்தப் பாத்திரங்கள் 44. அவற்றுள் பெயர் சுட்டப்படுவன 14. இது பொருத்தமே. ஆனால் பெண்கள் இருவர் என்பது குறைவு''. என்கிறார் டாக்டர் ஏ. என், பெருமாள் 8. இந்தக்குறை அன்னிமிஞிலி நாடகத்தில் இல்லை என்று துணிந்து மொழியலாம் மிஞிலி, மதியொளி, கண்மணி, மின்மினி ஆகிய நால்வர் பெண்பாத்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். பாத்திரங்களின் பெயர்களைப் பொறுத்தவரை அவர்தம் பண்பு களின் அடிப்படையில் பெயர்கள் அமைவது சிறப்பாகும்.

---

7 கவிதை நாடகம், பக்: 99-100, முற்குறிப்பு.
8 காண்க முற்குறிப்பு; பக்: 295

பண்டை இலக்கியப் பெயர் களையும் எடுத்துக் கொள்கின்றார்; தாமும் புதிய பெயர்களைப் படைத்துக் கொள்கின்றார் உலகநாதன்.

இந்தக் கவிதை நாடகத்தின் தலைவி மிஞிலி ஆவாள். மணி மேகலைக் காப்பியத்தில் மணிமேகலை அக்காப்பியத் தலைவியாக விளங்குகின்றாள். அது போன்று, மிஞிலி தலைவி ஆவாள். 'இவள் செந்தமிழ்ச் சுவைபோல் செழித்து வளர்ந்தவள்' ஆவாள். துணிவு கொண்ட நங்கை. தந்தைக்கு ஏற்பட்ட இன்னலையும் தங்கள் ஆக்களுக்கு ஏற்பட்ட இழிநிலையையும் கேட்டுச் சூளுரைத் தாள். நாலூர்க் கோசரைப் பேய்க்கு உணவாய் ஆக்குவேன்! பொட்டுப் பூச்சியாய் புன்மைத் தேரையாக இருக்கும் ஊமைத் தமிழர்களை ஒன்று சேர்ப்பேன்! என்னுயிரைக் கொடுத்தும் நான் எண்ணியதனை முடிப்பேன்! இனத்தைக் காக்க இன்னுயிரை விடுவேன்! என்று சூளுரைக்கின்றாள். பெற்றோர்க்கு அடங்கி நடக்கும் பாவையாக முதலில் அறிமுகம் செய்யப்பட்ட மிஞிலி, காதல் வயப்படுவதாக காட்டப்படுகின்றாள். பின் தந்தைக்கும் ஆக்களுக்கும் ஏற்பட்ட இன்னல்களை எண்ணி வருந்திக் கோசர் குலத்தை வேருடன் ஒழிப்பேன் எனச் சூளுரைக்கின்றாள். வீரம் செறிந்தவளாக இவள் வாழ்வில் திருப்பம் ஏற்படுகின்றது. திதிய மன்னன் துணையினை நாடுகின்றாள். பெற்றோரின் தூண்டுத லினால் இவள் திருமணம் வலியுறுத்தப்படுகின்றது. ஆம்! திரு மண வாழ்வினை விடவும் முதற்கண் செய்ய வேண்டுவது பழி துடைப்பதும் பகைவரை அழிப்பதும் என்று உறுதி பூண்டாள். கொண்ட கொள்கையில் உறுதி கொண்ட பெண்ணாக இவள் பண்பு சிறந்து ஒளிர்கின்றது. கொள்கை வெற்றியைக் கருதி,

"... ... ... நானும் அந்த
மனநிலை கொண்டே மற்றென் மனத்தைத்
தள்ளிப் போட்டுத் தக்கதோர் சூளுரை
தன்னையும் எடுத்தேன்''

[4: 1: 116-119]

என்கின்றாள். இவள் நம் நெஞ்சில் நிலைத்து நிற்கின்ற பாத்திர மாகப் படைக்கப் பட்டுள்ளாள் என்று கூறினால் தவறில்லை. அவள் சூளுரை வெற்றி பெற்றபின் மணம் முடித்துக் கொள் கின்றாள்.

அன்னி மிஞிலி நாடகத்தின் எதிர்நிலைத் தலைவன் இனியன் ஆவான். இவன் மிஞிலியை விரும்புகின்றான். அது ஈடேற வில்லை. எனவே தன் வலிமையைக் காட்ட விரும்புகின்றான்.

ஆக்களைக் கவர்ந்து செல்வதும், வழக்கு முடியும் முன்னமேயே அவற்றிற்கு நஞ்சூட்டிக் கொல்வதும் இவனுடைய பாத்திரத்தின் அழுத்தத்தை நன்கு காட்டுகின்றன. இவன் பெயர் வஞ்சப் புகழ்ச்சி நிலையில் சுட்டப்பட்டுள்ளது இவண் எண்ணி மகிழத் தக்கது. இவனும், தான் மிஞிலியை அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் ஆழமான உறைப்பும் கொண்டவனாகப் படைக்கப் பட்டுள்ளான். தனக்குத் தோல்வி வந்த ஞான்றும், தன் நண்பன் வலியன் அறிவுரை கூறியபோதும் கேளாதவனாகவே படைக்கப் பட்டுள்ளான். குறும்பியனுடைய வாளால் வீழ்த்தப்பட்டுக் குற்றுயிராய்க் கிடக்கும் நிலையிலும், இவன் மிஞிலியை விரும்புவதாக பிதற்றுகின்றான். இவ்வாறு கொடிய உள்ளம் கொண்டவனாக இனியன் படைக்கப்பட்டுள்ளான். இவ்விருவரைப்போலவே அன்னியும், குறும்பியனும், அஞ்சியும், வலியனும், கண்மணி, மதியொளியும் ஏனைய பாத்திரங்களும் படைக்கப்பட்டுள்ளனர்.

முடிவுரை:

செய்யுள் நடையில் அமைந்துள்ள அன்னிமிஞிலி நாடகம் சங்க இலக்கியக் கருத்தின் அடிப்படையில் அமைந்துள்ள இலக்கியக் கவிதை நாடகம் ஆகும். நாடக உத்திகளும் பாத்திரப் படைப்பும் இன்னபிற சிறப்புக்களும் செறிந்து விளங்கும் செந்தமிழ் நாடகம் அன்னிமிஞிலி என்பது மேலே கண்ட செய்திகளால் தெளிவாகின்றது.

——:(o):——

சோழர் காலக் கிராம ஆட்சி

செல்வி கோ. கார்த்திகேயணி,
எம்.ஏ., எம். ஏ., பி. எச். டி.,
தஞ்சை.

தமிழகத்தில் முடியுடைய வேந்தராக விளங்கிய மூவேந்தருள் நடுநாயகமாய் விவங்கியவர்கள் சோழமன்னர்களேயாம். சோழ வேந்தர்கள் சூரிய குலத்தைச் சேர்ந்தவரென்பதை **''செங்கதிரச் செல்வன் திருக்குலம்''** என்று மணிமேகலை என்னும் கடைச் சங்க கால நூல் கூறும். சோழர்குடி படைப்புக்காலந் தொட்டு மேம்பட்டு வருவதாக இலக்கியங்கள் கூறுகின்றன. சங்ககால இலக்கியங்களுள் புறநாறூறு, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றுள் சோழர்களைப் பற்றிய செய்திகள் உள்ளன. பின்னர் கி, பி. 9 ஆம் நூற்றாண்டிலேயே சோழமன்னர்களின் ஆட்சி தமிழகத்தில் தோன்றியுள்ளது. இப்பிற்காலச் சோழர் மரபைத் தோற்றுவித்த மன்னன் விசயாலய சோழன் ஆவான்.

முதன் முதலாக சோழநாட்டை ஆட்சி செய்த சோழ மன்னர்களே சரித்திரக்காலச் சோழர் எனப்பட்டனர். அவர்களின் ஆட்சியில் சோழநாடு மிகவும் சிறப்புடன் செல்வவளம் நிறைந்ததாக இருந்தது, அவ்வாறு சரித்திர காலச் சோழராட்சி மிகவும் உயர்ந் திருந்தற்கு காரணம் சோழ மன்னர்கள் மக்களின் உள்ளப் பாங்கினை உணர்ந்து செம்மையுடன் செங்கோலோச்சியதேயாகும் முடிமன்னர்களாக அவர்கள் திகழ்ந்தாராயினும் தமது முடியாட்சியில் குடியாட்சியே கொண்டிருந்தனர் சோழ மன்னர்கள். அக்குடியாட்சியே கிராம ஆட்சி முறையாகும். இவ்வாட்சி மக்களால் மக்களுக்காக மக்களால் தேர்ந்தெடுப்பவர் மூலம் நடத்தப்பெறும் ஆட்சியாகும்.

சோழராட்சியின் சிறப்பு:

விசயாலய சோழன் முதலாக மூன்றாம் இராசேந்திர சோழன் ஈறாக ஏற்றத்தாழ 400 ஆண்டுகளுக்கு (கி. பி. 846-1279) மேலாக ஆட்சிசெய்த சோழ மன்னர்கள், தமது ஆட்சியில் மக்கள் யாவரும் மனித உரிமைகளுடன் வாழ வழி வகுத்திருந்தனர். குடி தழுவிக் கோலோச்சினர். சோழமன்னர்கள் நிகழ்த்திய ஆட்சியில் முதல் இராசராசனது ஆட்சிக்காலம், சோழர்கள் ஆட்சியின் பொற்கால

மாகும். இக்காலம் கி. பி 985—1014 ஆகும். இவனது ஆட்சியில், சோழ மண்டலம் நன்முறையில் அளந்து பிரிக்கப்பட்டுள்ளது. அவை: மண்டலம், வளநாடு, கூற்றம், ஊர், கிராமம், பிடாகை என்ற வகையில் பிரிக்கப்பட்டிருந்தன. இவற்றுள் கிராமமே நாட்டின் 'கண்' எனப் போற்றப்பட்டதால் கிராம ஆட்சியே மன்ன ராட்சியின் மாட்சிக்குரியதாக இருந்தது கிராம ஆட்சி கிராம மகா சபையினரால் நடத்தப்பட்டது.

கிராம மகாசபைகள்:

சோழ மன்னர்கள் தமது ஆட்சியின் கீழ் வாழும் மக்கள் ஆட்சி முறையில் தேர்ச்சி பெறவும், தத்தம் ஊரின் நன்மை தீமைகளை ஆராய்ந்து அவற்றிற்கு ஆவன புரியவும், ஊர்கள் தோறும் சபைகளை அமைத்திருந்தனர். இச்சபையின் உறுப்பினர் எல்லோரும் கிராமத்திலுள்ள பொது மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்றவராவர். அக்காலத்தில் ஒவ்வொரு ஊரும் பல பகுதி களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பகுதியையும் 'குடும்பு' என்று வழங்கினர். ஒவ்வொரு பிரதிநிதிகளே ஒவ்வொரு குடும் பிற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள 'உத்தர மேரூர் 30 குடும்புகளை' உடையதாய் இருந்தது. தஞ்சைக்கு வடக்கேயுள்ள 'சந்திர லேகைச் சதுர்வேதி மங்கலம் 60 குடும்புகளை யுடையதாய்' இருந்தது. ஆகவே சபைக்குரிய உறுப்பினரது எண் அவ்வூரின் குடும்புகளின் பெருமை சிறுமைக்கு ஏற்ற அளவில் குறிக்கப்பட்டிருந்தது.

உறுப்பினராகத் தேர்தற்குரியார்:

சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெறும் உரிமை யுடையோர். காணிக்கடன் செலுத்துவதற்கு ஏற்ற கால் வேலி நிலமும், சொந்த மனையும் உடையவராயும், சிறந்த நூல்களைக் கற்றவராகவும், காரியங்களை நிறைவேற்றுவதில் வன்மையுடைய வராகவும், அறநெறியில் ஈட்டிய பொருளைக் கொண்டு தூய வாழ்க்கை நடத்துவோராகவும், 35 வயதுக்கு மேல், 75 வயதுக் குட்பட்டவராகவும், மூன்று ஆண்டுகட்குட்பட்டு நிறைவேற்று கழகத்திலும் பிறவாறும் உறுப்பினராக இருந்திராதவருமாக இருத்தல் வேண்டும்'. என்பது உத்திர மேரூர் கல்வெட்டால் அறியப்படுகிறது.

உறுப்பினராகத் தகாதவர்:

எந்தக்காரிய நிறைவேற்றுக் கழகத்திலாவது உறுப்பினராக இருந்து கணக்குக் காட்டாதிருந்தவரும், பெருங்குற்றங்கள் புரிந் தோரும், கிராமக் குற்றப்பதிவு புத்தகத்தில் பதிவு செய்யப்பெற்ற

வரும், பிறர் பொருளைக் கவர்ந்தோரும், கள்ளக்கையெழுத்து இட்டோரும், குற்றம் காரணமாக கழுதைமீது ஏற்றப்பட்டோரும், எத்தகைய கையூட்டு (இலஞ்சம்) கொண்டோரும், கிராமத்துரோகி என்று கருதப்பட்டோரும் இத்தகைய குறைகள் உடையவரின் உறவினர்களும், தம் வாழ்நாள் முழுமையும் கிராமசபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெறுதற்குத் தகுதியற்றவராவர்.

குடவோலை முறை:

பொதுமக்கள் கிராம சபையின் உறுப்பினரை ஆண்டு தோறும் குடவோலை வாயிலாகத் தேர்ந்தெடுப்பது வழக்கமாகும். தேர்ந் தெடுப்பதற்குக் குறிக்கப்பெற்ற நாளில் அரசாங்க அதிகாரி ஒருவர் சபை கூடுவதற்கு அமைக்கப் பட்டுள்ள இடத்தில் அவ்வூரிலுள்ள இளைஞர் முதல் முதியோர் ஈறாகவுள்ள யாவரையும் '' காளம் '' ஊதுவித்துக் கூட்டுவர். அக்கூட்டத்தின் நடுவில் ஒரு குடம் வைக்கப்பெறும். அங்குள்ள முதிர்ந்தோர் ஒருவர், அக்குடத்தை மேலே உயர்த்தி அதனுள் ஒன்றுமில்லை என்பதை எல்லோரும் அறியக்காட்டி கீழே வைத்த பின்னர், ஒவ்வொரு ஊரின் உட்பிரி வாகிய குடும்புக்கட்குரியார் தமக்கு தகுதியுடையவர் என்று தோன்றியவர் பெயரைத் தனித்தனி ஓலையில் எழுதி அவ் வோலைகளை ஒருங்கு சேர்த்து அவை எக்குடும்பிற்குரியவை என்பது நன்கு புலப்படுமாறு அக்குடும்பின் பெயர் வரையப்பெற்ற வாயோலை ஒன்றைச் சேர்த்துக்கட்டி குடவோலை இடுவர்.

உறுப்பினர் தேர்வு:

பின்னர் அம்முதியவர் அங்கு நடைபெறுவதை அறியாத இளஞ் சிறுவனைக் கொண்டு அக்குடத்தினின்றும் ஓர் ஓலைக்கட்டை எடுப்பித்து அதனை அவிழ்த்து வேறு ஒரு குடத்திலிட்டுக் குலுக்கி அவற்றுள் ஓர் ஓலையை அச்சிறுவனைக் கொண்டே எடுக்கச் செய்து அதனைத்தாம் பெற்று அங்குள்ள ' காரணத்தான் ' (கிராமக்கணக்கன்) கையிற் கொடுப்பர். அவன் தன் கைவிரல் களை விரித்துக்காட்டிய பின்னர் உள்ளங்கையில் அதனை வாங்கி அவ்வோலையில் எழுதப்பெற்றுள்ள பெயரை அங்குள்ளார் யாவரும் உணருமாறு படிப்பான். பின்னர் அங்குள்ள நம்பிமார் அனை வரும் அதனை படித்தறிவார்கள். அதன் பிறகு அப்பெயர் ஓர் ஓலையின்கண் வரையப்பெறும். அவ்வோலையிற் குறிக்கப்பெற்ற பெயருடையவரே அக்குடும்பிற்குரிய கிராமசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றவராவர். இங்ஙனமே மற்றைக் குடும்பு களுக்குரிய உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப்பெறுவர்.

கிராமசபையின் உட்பிரிவு:
வாரியம் (Department)

ஊரிலுள்ள எல்லாக் குடும்புகளுக்கும் உரிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்த பின்னர் கிராமசபையின் உட்பிரிவாகிய வாரியங்கள் அமைக்கப்படும். கிராமசபை உறுப்பினருள் வயதிலும், கல்வி யிலும் அறிவிலும் முதிர்ந்தோர் பன்னிருவரைச் ''சம்வத்சரவாரி யத்தார்,'' ஆகத் தேர்ந்தெடுப்பர். மற்றையோர் தோட்டவாரியம், ஏரிவாரியம், கழநி வாரியம், பஞ்சவார வாரியம், கணக்குவாரியம் கலிங்கு வாரியம், தடிவழி வாரியம், பொன் வாரியம் என்ற உட் கழகங்களாகப் பிரிக்கப் பெறுவர். சபையின் உறுப்பினர் ஏதேனும் குற்றம் புரிந்து விலக்கப்பட்டாலன்றி ஓராண்டு முடிய எவ்வகை ஊதியமும் பெறாது தம் கடமைகளை நடத்துவதற்கு உரிமையும் அதிகாரமும் பூண்டவராவர். இவர்களை ''ஆளுங்கணத்தார்'' எனவும் ''பெருமக்கள்'' எனவும் கூறுவர்.

வாரியத்தார் செயல்கள்:

1 சம்வத்சரவாரியம் (அறங்கூறவையம்)

கிராமங்களில் அறங்கூறும் பணியைச் சம்வத்சர வாரியத்தார் செய்து வந்தனர். வழக்கில் இருதிறத்தார் கூற்றுக்களும் ''ஆட்சி ஆவணம், அயலார் காட்சி என்பன கொண்டு கவனிக்கப்பட்டன, ஊர்ச்சபையை அடுத்து ''ஆவணக்களரி'' இருந்தது. அங்கு மூல ஓலைகள் காக்கப்பட்டன. அவை வைக்கப்பட்ட இடம் ''அரண்தருகாப்பு'' எனப்பட்டது. படி ஓலை, மூல ஓலை ஆகிய வற்றைச் சோதித்துப் பல வழக்குகள் முடிவு செய்யப்பட்டன.

2. தோட்ட வாரியம்:

புஞ்சை, புறம்போக்கு நிலங்களைப் பற்றிய எல்லாவற்றையும் கண்காணிப்பர்,

3. ஏரிவாரியம்:

ஏரி, குளம், ஊருணி, வாய்க்கால் முதலிய நீர் நிலைகளைப் பாதுகாத்தலும் விளைவிற்கு வேண்டும் நீரைப் பாய்ச்சுவித்தலும் செய்வர்.

4. கழனி வாரியம்:

நஞ்சை நிலங்களைப் பற்றிய யாவற்றையும் கண்காணித்து வருவர்.

5. கணக்கு வாரியம்:

ஊர்க் கணக்குகளைக் கண்காணிப்பவர்.

6. கலிங்கு வாரியம்:

ஆறு, ஏரிகளிலுள்ள மதகுகளைக் கண்காணித்து வேண்டிய தேவைகட்கேற்ப நீரை வடித்தும், பெருக்கியும், கண்காணிப்பர் (கலிங்கு-மதகு)

7. தடிவழி வாரியம்:

வயல்களிலும் ஊர்ப்புறங்களிலும் செல்லும் பாதைகளையும் சாலைகளையும் கண்காணிப்பர்.

8. பொன் வாரியம்:

அரசாங்கத்தில் வெளியிடப்பட்ட பொற்காசு செப்புக்காசு ஆகியவற்றை ஆராய்ந்து கண்காணிப்பர்.

9. பஞ்சவார வாரியம்:

பஞ்சகாலங்களில் மக்களுக்கு உதவும் பொருட்டாக இவ்வாரியத்தார் ஊரிலுள்ள விளைவு தானியங்களில் ஆண்டு தோறும் ஒரு சிறு பகுதியைப் பெற்று சேமித்து வைப்பர்.

ஊர் கணக்கு [கரணத்தான்]

மேலே கூறப்பட்ட கழகத்தார் பணித்தவற்றைச் செய்பவன், கரணத்தான் அல்லது மத்தியஸ்தன் எனப்படுவான், நல் வழியில் ஈட்டிய பொருளும், நல்லொழுக்கமும் உடையவனையே கரணத்தானாக அமைப்பர். இவன் கணக்கு எழுதுதல் வேண்டும், எழுதிய கணக்கை சபையார் விரும்பியபோது நேரில் காட்டுதலோடு ஆண்டு தோறும் கூடும் மகாசபையில் ஆராய்ந்து பார்ப்பதற்கும் காட்டுதல் வேண்டும். தான் எழுதியுள்ளது சரியான கணக்கு என்பதை காய்ச்சிய மழுவைக் கையில் ஏந்தி உறுதிமொழி கூறிக்கொடுத்தல் வேண்டும். அங்ஙனம் கொடுக்குங்கால் கையில் சூடுபடாதிருந்தால் தணக்கனுக்குரிய ஏழு கழஞ்சு பொன் சம்பளத்துடன், காற்பங்கு பொன்சேர்த்துக் கொடுக்கப்படும். கையில் ஊறுபாடு நேருமாயின் 10 கழஞ்சு பொன்தண்டமும் சபையோரால் விதிக்கப்படும். இவ்வாறு கிராம சபையினரால் சோழப் பேரரசு மேன்மை பெறுவதாயிற்று,

மக்கள் உரிமைகளை மதித்தவன் இராசராசன்:

கிராமசபையின் உரிமையினை ஓர் எடுத்துக்காட்டினுல் விளக்கலாகும். இராசராசனுடைய பாட்டன் ‘‘ அரிஞ்சய சோழன் ’’ ஆற்றூரில் பகைவரோடு போர் புரிகையில் இறந்தான். இராசராசன் தன் பாட்டன் நினைவாக ‘‘பள்ளிப்படைக் கோயில்’’ ஒன்று அங்கு எழுப்ப எண்ணினான். அவ்வாறே வடாற்காடு மாவட்டம் என்று இப்பொழுது குறிக்கப்பெறும் செயங்கொண்ட சோழ மண்ட

லத்தில் திருவல்லத்திற்கு 6 கல் மேற்கே உள்ள ''மேற்பாடி'' என்னும் ஊரில் ''அரிஞ்சயேச்சுரம்'' என்னும் பெயரால் கி. பி. 1014ல் கோயிலொன்று கட்டினன். அக்கோயிலுக்குரிய நாள் வழிபாட்டிற்கும், பிற செலவுகளுக்கும் உரியதாக இராசராசன் நிலபுலன்களை அறமாக ஏற்படுத்த வில்லை காரணம் தன் ஆட்சியில் அமைக்கப்பட்ட கிராமசபையார்களே ஊரின் எத்தகைய உரிமைகட்கும் பொறுப்புடையவர்கள் என்னும் சட்டதிட்டங்களுக்கு மாறாகத்தான் எதுவும் செய்ய முற்படவில்லை என்பதேயாம். ஆனால் மேற்பாடியிலுள்ள மக்கள் தாங்களே 51361/2 குழி நன் செய் நிலத்துடன் நந்தவனத்திற்குரிய இடத்தையும் அளவிட்டு எல்லைக் கல் நட்டு தேவதான இறையிலியாக அரசனுக்குக் கொடுத்துள்ளார்கள் இக் கருத்தினை,

> ''உடையார் ராசராசதேவர் எங்கள் நகரத்தில் எடுப்பித்தருளிய திரு அரிஞ்சயேச்சுரத்து மகா தேவர் ஸ்ரீ கோயிலுக்கு திருச்சுற்றோலைக்கும் திருமுற்றத் திற்கும், திருநந்தவனத்துக்கும் ஆக நாங்கள் இத்தேவர் களுக்கு அளித்த நிலம்''

என்னும் கல்வெட்டு விளக்குகிறது. பேரரசனாகிய இராசராசன் தன் ஆட்சியில் எத்தகைய அறச் செயலும் செய்வதற்கு உரிமை உடையானாயினும் தான் கிராம சபையோர்க்கும், மக்கட்கும் அளித்துள்ள அதிகாரங்கட்கும், உரிமைகட்கும் மாறாக எதுவும் நிகழாமல் குடி தழுவி அறம் செய்துள்ளான். இதனால் இராச ராசன் மக்களுக்கு அளித்திருந்த உரிமைகளை முறையாக காத்து ''செங்கோல் செலுத்திய செம்மல்'' என்பது தெளிவாகும்.

இவ்வாறு வரும் கல்வெட்டுச் சான்றுகளிலிருந்து சோழராட்சி யில் முடியாட்சியைவிட குடியாட்சியே அடிப்படையாக ஆட்சி புரிந்தது என்ற உண்மை ஓரளவிற்கு நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது.

"திருக்குறள் பீடம்"

குருகுலம் அழகரடிகள்

—:(சிறுவை. நச்சினார்க்கினியன்):—

''என்னிடம் பழகியவர்களில் இளவழகனார் வல்லுநர், நுண்ணறிவாளர், நன்கு விளங்கக் கூடியவர்; சிவஞான போத விரிவுரைகள் இவ்வளவு சிறப்பாய் நடைபெறுவதற்கு அவர் எவ்வவவு நூல்களைப் பயின்று உழைத்திருக்க வேண்டும். எனக்கன்றோ அந்த அருமை தெரியும்! பாராட்டுதலோடு, பரிசும் வழங்குமின்!''

இப்படித் தம் மாணவரை ஆசிரியர் மறைமலையடிகளார் புகழ்கிறார். புகழ்ந்தால் மட்டும் போதுமா? தம் மாணவர் இவ்வளவு சிறப்பு நலம் பெற்று சிவஞான போதத்திற்கு விளக்கம் செய்வதை உணர்ந்து, உள்ளம் நெகிழ்ந்து, 'பரிசும்' கொடுங்கள் என்று பெருமிதம் கொள்கிறார். இப்பேறு 20-ஆம் நூற்றாண்டில் யாருக்கும் கிடைத்திலது. சிவஞானபோத விரிவுரைகளைக் கேட்ட திரு. கீ. இராமலிங்கனார், சிவநெறியின் இணையிலாச் சிறப்பை அடிகளார் வாயிலாகக் ,கேட்டு உணர்ந்த பின்பு, இன்னொருவர் வாயிலாக அதனைக் கேட்கத் தோன்றுவதில்லை.'' என்று கூறினர்.

இங்ஙனம் புகழ் மணம் மிக்க அறிவழகர் — இளவழகனார் அவர்கள் தமிழகத்தின் நற்றவப் பயனாய்த் தொண்டை நன்னாட்டில் மதுராந்தகம் மாம்பாக்கம் கிராமத்தில் 1904-ஆம் ஆண்டு ஏப்ரல் 10-ஆம் நாள் தோன்றினார்கள். தந்தை பெயர் சுப்பராயர், தாய் மாணிக்கம் அம்மையார். பெற்றோர் இட்ட பெயர் பாலசுந்தரம். அடிகள் கற்பன கற்று முதலில் மாம்பாக்கம் பக்கலில் உள்ள சில இடங்களில் ஆசிரியர் பணி செய்தார்கள். ஆசிரியர் மறைமலையடிகளிடம் அணுகி முறையாகப் பாடம் கேட்டார்கள். நன்னூல், தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் பெரிய புராணம், சிவஞானபோதம் முதலிய நூற்களைக் கசடறக் கற்றார். தம் 19-ஆவது வயதிலேயே சிறந்த அறிஞர் ஆனார். அறிவுக் காதல் உடையவராய்த் திகழ்ந்தார்கள். பிற்றை நாளில் அக்காதலால் வெற்றியும் பெற்றார்.

இவருக்கு 1925ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. துணைவியார் தங்கம்மாள் அழகரடிகளாரின் தமிழ்ப் பணிக்குத் துணை நின்றார்கள். இரண்டு பெண் மக்களைப் பெற்றார்கள். அடிகளார் இல்லறம் நல்லறமாக நடை பெற்றது.

1927-இல் கரந்தைப் புலவர் கல்லூரியில் ஆசிரியர் மறைமலையடிகளாரின் தலைமையில் ''சிலப்பதிகாரம்'' எனும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றி ஆசிரியர் மறைமலையடிகளாரின் வாழ்த்தினையும் பாராட்டினையும் பெற்றார்கள்.

அடிகளார் 1942–43-இல் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டச் சார்பில் ''சிவஞானபோதம்'' பற்றி விரிவுரைகள் நிகழ்த்தினார். சிவநெறி செஞ்சொற் கொண்டல்'' எனும் பட்டமும் உரூபாய் இரண்டாயிரம் பரிசும் பெற்றார்கள். 1944-49 வரை ''திருமந்திரம்'' விளக்கம் செய்து ''திருமந்திரப் பேராசிரியர்'' என்ற பட்டமும் உரூபாய் பத்தாயிரம் பரிசும் பெற்றார்கள். அழகரடிகள் சொல்லழகினைத் துய்த்த சொல்லேர் உழவர், ''திராவிடத் தாயின்'' ஆசிரியர் தேவநேயப் பாவாணர் அவர்கள், ''திருந்திய பெரும்புலவர் இளவழகனார்; பாம்பின் கால் பாம்புக்குத் தெரியும் என்றபடி எங்கட்குதானே அவ்வுண்மை நன்கு தெரியும். சிவம் என்பது செம்மை அல்லது நேர்மை என்னும் கருத்துடையது. சிவஞான போத விரிவுரையில் அந்நேர்மை விளங்குகின்றது'' என்றார்கள். மற்றும் டாக்டர் இராசமாணிக்கனார், ''சிவஞான போத விரிவுரையில், குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே மக்கள் மண்டபத்தில் நிறைந்திருந்தனர். குறிப்பெடுப்பதற்குப் பலர் ஏடும் எழுதுகோலுமாயிருந்தனர். சமயக் கருத்துக்களைத் தமிழிற் கூறமுடியாதே என்று எண்ணியிருந்தேன். இளவழகனார் அவர்கள் விரிவுரை கேட்ட பின்பு அந்த எண்ணம் மாறிவிட்டது'' என்று பெருமை கொள்கிறார்.

அடிகளார் 1927 முதல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் பதிப்பாசிரியராக விளங்கி பல இலக்கிய நூற்களுக்குச் சிறந்த ஆராய்ச்சி முன்னுரைகள், அடிக்குறிப்புகள், அரும்பத விளக்கங்கள் ஆகிய பணிகளில் ஈடுபட்டார்கள். செந்தமிழ்ச் செல்வி'' இதழில் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல எழுதியுள்ளார்கள். இவர்கள் எழுதிய முன்னுரைகளில் பல்லோராலும் பாராட்டப் பெறுவது கலித்தொகையின் முன்னுரையாகும். அவ்வைக்கு ஒரு அதியமான் கிடைத்து அவ்வையின் புகழ் சிறந்தது. அஃதேபோல் தமிழ் நூற் காவலர் வ. சுப்பையா அவர்கள் இளவழகருக்கு அதியமானாக விளங்கினார்கள். அது பொய்யுரை அன்று.

தவத்திரு அடிகளார், ''அகத்தினை விளக்கநூல்; இராம லிங்கர் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்; ஔவையார் திருவுள்ளம்; சிவப்பிரகாசர், செந்நெறி; சங்க நூற் கட்டுரைகள் (இரண்டு பகுதிகள்); சங்க இலக்கிய இன்கவித் திரட்டு (3 பகுதி கள்); இவை ஆங்கிலத்திலும் உருவாகியது; பண்டைத் தமிழர் இன்பியல் வாழ்க்கை; பண்டைத் தமிழர் பொருளியல் வாழ்க்கை; இவைகள் இலக்கியச் செல்வர்களுக்கு ஒரு வைப்பு நிதி. இவை யல்லாமல் சமய சம்பந்தமான பல வெளிவந்தன. இஃதன்றி பல் வேறு சமய இலக்கிய நிறுவனங்களின் மலர்களிலும், உயர்பள்ளி, கல்லூரி ஆண்டு விழா மலர்களிலும், மணிவிழா மலர்களிலும் எண்ணற்ற கட்டுரைகளைக் கண்டோம். இவையெலாம் கற் றார்க்கு அளித்த கருத்துக்கள். இவை போதாது என நினைந்தார்.

ஆகவே பொதுமக்களுக்கும் பயனாகும் வண்ணம், சென்னை யில் திருக்குறளை இரண்டுமுறை விளக்கம் செய்தார். அதில் ஒன்று திருவள்ளுவர் தொண்டர் படையின் மூலம். மற்றும் சிவ ஞான சிந்தியார், திருமுருகாற்றுப்படை, கந்தரலங்காரம், கந்த ரனுபூதி, கந்தர் கலி வெண்பா, பெரிய புராணம், திருவாசகம் ஆகிய சமய இலக்கியங்களுக்கு சிறந்த விளக்கங்கள் அளித்து தமிழகத்தில் ஒரு மறுமலர்ச்சியை, சமய உலகத்தில் ஒரு விழிப் புணர்ச்சியை உண்டாக்கி வைத்தார். தமிழகம் முழுவதும் உள்ள இடங்களில் அடிகளாரது விரிவுரைகள் நிகழ்ந்தன. அடிகளார் விரிவுரைகளுக்கு ஆயிரக் கணக்கில் கூடுவர்.

அடிகளார் இத்துடன் நின்றார் இல்லை. திருத்தமான கருத்துக்களை பிஞ்சு உள்ளங்களில் நிலைத்து நிற்கச் செய்ய ''குருகுலம்'' என்ற அமைப்பினை 1949-ஆம் ஆண்டில் கண்டார் கள். ஓர் ஆண்கள் பள்ளியும், பெண்கள் பள்ளியும் தோன்றின. கிராமங்களில் இருந்து தொலை தூரத்தில் இருந்து வரும் மாணவர் களுக்குப் பசி நோய் போக்க ''மாணவர் இல்லமும்'' தொடங் கினார். சீலத்திரு. ஓமந்தூர் ரெட்டியார் அவர்கள், பேராசிரியர் கல்கி, ரோரா சிரியர் திரு. வி. க., ரா. பி. சேதுப்பிள்ளை முதலி யோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இக்காட்சியைக் கண்ட பேராசிரியர் கல்கி,

> ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற அப்பர் பெருமானுடைய அருள்மொழியை வாழ்க்கையில் நிறைவேற்றி வரும் தமிழ்நாட்டுத் தொண்டர் களில் ஒருவர் திரு இளவழகனார். நெடுங்கால மாகத் தமிழ்த் தாய்க்கு அவர் அரும்பணி ஆற்றி வருகிறார். ... ... நூல் இயற்றும்

பணியுடன் இளவழகனாரின் உள்ளம் திருப்தி யடைய வில்லை. திருவள்ளுவர் பெருமானின் அறவுரைகளை வாழ்க்கையில் நிறைவேற்றி வைப்பதையே நோக்கமாகக் கொண்ட குருகுலம் ஒன்று அமைக்க வேண்டும் என்று விரும்பினார். ... ... முப்பதினாயிரம் செலவில் ஒரு வரிசைக் கட்டடங்கள் எழும்பின ... ...''

எனப் புகழ்கிறார். 1949 கல்கி இதழில் தம் எழுத்தால் அடிக ளாரை இவ்வாறு அருச்சித்தார் எனின் மிகை ஆகாது. இப்பணி யைக் கண்ட முத்தமிழ்க் காவலர், எழுத்தால், பேச்சால், உழைப் பால், சைவத் தொண்டு, தமிழ்த் தொண்டு கொண்டு அதற் கொரு குருகுலமும் கண்டார்'' என்று விம்மிதம் அடைகிறார். அழகரடிகள் கண்ட குருகுலம் இன்று ஆண்கள் உயர்பள்ளி ஒன் றினையும் பெண்கள் உயர்பள்ளி ஒன்றினையும், மாணவர் இல்ல மும் குறள் மணம் பரப்பி மக்கட்குப் பயன் விளைவிப்பதாய் உள்ளது மதுராந்தகத்தில். பேராசிரியர் கல்கி அவர்கள் மேலும் கூறினார், திரு. இளவழகனார் தொடங்கி இருக்கும் மாம்பாக்கம் குருகுலம் அதிவிரைவில் வளர்ச்சி பெற்று மகத்தான சர்வகலா சாலையாகும் என்று எதிர் பார்க்கிறோம்'' என்றார். இவ்வுரை மெய்யுரையாக அடிகளார் கொண்ட முயற்சிகள்—உழைத்த உழைப்பு அம்மம்ம! கணக்கில.

சீலத்திரு அடிகளார் 1935–36-இல் வாலாசாபாத்தில் ஆசிரி யர்க்குச் சாத்திர வகுப்புகள் நடத்தினார்கள். சில தவநிலைகளை மேற்கொண்டு 1936-37-இல் திருவண்ணாமலை இரமணர் ஆச்சிர மத்திலும், 1938-39-இல் பாலியாற்றுக் கரை மருங்கில் பிறை யூர்த் தமிழ் மலையிலும் தவமியற்றினார். பின் ஒருகால் மயிலை திருவள்ளுவர் திருக்கோயிலில் தவம் இருந்தார்கள்.

பேட்டைகள்தோறும் இறைவழிபாடும் திருக்குறள் விளக்கங் களும் நடைபெற ஒவ்வொரு ஞாயிறுதோறும் வழிபாட்டு முறை யைத் தொடங்கினார் 1954-55 ஆம் ஆண்டளவில். இதனை இராசயோகி திரு. இராசாசி அவர்கள் தொடங்கி வைக்க, திரு. சி. சுப்பிரமணியம், திரு. கல்கி அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

1955-இல் சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் கோவைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் ''சங்கநூற் பெரும் புலவர்'' என்றும் பட்டமளித்துச் சிறப்பித்தார். 1957-இல் பம்பாய் சென்று

பல விரிவுரைகள் செய்தார்கள். 1968-இல் கல்கத்தா சென்றார்கள். அதுவல்லாது வடநாட்டுப் பயணம் மேற்கொண்டு பல இடங்களைக் கண்டனர். அடிகளார் 1947 ஆண்டு முதல் 1954 ஆம் ஆண்டுவரை ஆண்டுதோறும் ஒவ்வொரு பகுதியாகத் தமிழகம் முழுவதும் உள்ள பாடல் பெற்ற எல்லாப் பகுதிகளையும் நூற்றுக் கணக்கான அன்பர்களுடன் சென்று சமயப் பணி செய்து வந்தார்.

இளவழகனாராக இருந்த இவர்கள் 2—5—60-இல் நடைபெற்ற சென்னைச் சிவனடியார் திருக்கூட்ட மெய்யுணர்வு விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் ''திருக்குறள் பீடாதிபதி'' ஆனார்கள். அழகரடிகள் எனப் பெயர் பெற்றார்கள். அன்றுமுதல் திருக்குறள் பீடத்தின் முதல் சன்னிதானமாய் ,விளங்கி தமிழகமெங்கும் திருக்குறள் பணியை தாம் மறையும்வரை செய்தார்கள். தமிழ் மறையாகிய திருக்குறள் தொல்காப்பியத்திற்கு முந்தியது என்பது அடிகளார் கருத்து. மக்கள் வீடுபேறு அடைந்து இன்பமுற திருக்குறள் அறம் பொருள் இன்பம் மூன்றையும் தங்கள் கருத்தில் கொள்ள வேண்டும்'' என்பதே அடிகளாரின் இறுதி மூச்சு.

கருவிலே திருவுடைய இப்பெருமகன்

''திருக்குறள் அடிகள்''
''சிவநெறி செஞ்சொற் கொண்டல்''
''சித்தாந்த செஞ்ஞாயிறு''
''சங்கநூற் பெரும்புலவர்''
''திருமந்திரப் பேராசிரியர்''

ஆகிய பட்டங்கள் மக்கள் பாராட்டிக் கொடுத்து மக்கள் பெருமை தேடிக் கொண்டனர். அடிகளாரோ இப்பட்டங்களில் பற்று அற்று தன்னைச் ''சிவத்திரு'' என்று அழைத்தாலே போதும் என்பார்.

அழகரடிகள் ''முல்லைக் கொடி'' எனும் பிறை இதழினையும் ''சைவம்'' என்ற திங்கள் இதழினையும் நடத்தினார்கள். பின்னர் 1976-இல் ''பொதுமறை'' எனும் திங்கள் இதழினைத் தோற்றுவித்து தாம் மறையும்வரை திருக்குறள் விளக்கங்கள் கண்டு சிறந்த முறையில் நடத்தினார்கள்.

அழகரடிகள் மேற்கொண்ட பணிகளில் சிறப்பு வாய்ந்ததும் தம் வாழ்நாள் இறுதிவரை செய்த சிறந்த பணி, 1945-இல் சிவனடியார் திருக்கூட்டச் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் ஆனித் திங்கள்

தோறும் ''திருமுறைப் பெருவிழா'' எடுக்கும் திருப்பணியாகும். இப்பணி ஆண்டுதோறும் மிகச்சிறப்பாக நடைபெறும். அப்பர் பெருமானே எழுந்தருளி தமிழகத்தை உய்விக்க வந்தார்கள் எனக் கருதி சிவனடியார் திருக்கூட்டப் புரவலர் ம. இரா. சம்பந்தம் அவர்கள் இத்தகு பணிகளுக்கு பொருளும் தொண்டும் பயனாகியது எனின் அது மிகையன்று. அன்பர் திரு. ந. இரா. ஆடலரசு அவர்களின் பணிகள் அணி செய்தன.

அடிகளாரின் மணிவிழா 2—5—1965-இல் மிகச் சிறந்த முறையில் சென்னைச் சிறுவர் அரங்கில் காலை, மாலை நடைபெற்றது. தமிழகம் முழுவதும் இருந்து குருகுல அன்பர்கள் கூடினர். தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் காலையிலும், தமிழ்க் காவலர் டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள் மாலையிலும் தலைமை ஏற்றார்கள். அறுவகைச் சமய சார்பில் ஆறு பேரறிஞர்கள் அடிகளாரின் புலமை நலங்களைப் பாராட்டினர். அது போது திரு. ந. இரா. முருகவேள் அவர்கள் பதிப்பாசிரியர்களாய் இருந்து மிகச் சிறந்த ''மணிவிழா மலர்'' ஒன்று வெளியிடப் பெற்றது. அதே சமயம் அடிகளாரிடம் கண்ணப்பர் போன்ற பேரன்பினை வழுவிலாது செலுத்தி நின்ற திரு. ஆறுமுகம் அவர்கள்'' அழகரடிகள்'' என்ற சிறு வரலாற்றுச் சிறப்பு நூல் வெளியிட்டார்கள்.

1975-இல் அடிகளார் தம் 71.ஆம் வயதில் ''பவள விழா'' மதுராந்தகம் குருகுலத்திலேயே மிகச் சிறப்பாக நடந்தது. அறிஞர் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

இங்ஙனம் அழகரடிகள் தமிழகத்தில் தமிழ்மறை திருக்குறள் சிறக்கவும் அதன்வழி மக்கள் உய்யவும் அடிகளார் மேற்கொண்ட பணிகள் பலப்பல. அப்பணிகளைச் செய்து கொண்டே இருந்தார்கள். துன்பங்களைத் தாங்கி இன்பங் கண்டார்கள். கவலை சூழ்ந்தபோது நகைத்தார்கள். தம் பயணத்தின் வழியில் முட்கள் கண்டபோது குனிந்து எடுத்து அப்புறப்படுத்தினார்கள். பாறைகள் இடற்பட்டபோது உடைத்து எறிந்தார்கள். மேற்கொண்ட பயணத்தை தொடர்ந்து மேற்கொண்டு நடந்தார்கள் — நடந்து கொண்டே இருந்தார்கள். ஒரு நாள் 18—2—81-இல் அடிகளாரின் கால் நிலம் தோயவில்லை, தமிழ்மக்களை உய்விக்க எழுதிய கைகள் கட்டுண்டன. கண்கள் இறைநாட்டம் கொண்டன. அமரர் ஆனார். வான் கலந்து ஒளி மயமானார்! வெல்க அடிகளாரின் குருகுலப் பணிகள்!

மொழியும்—மொழிக் கலப்பும்

—ஆ. பாலன்

''வடமொழி தமிழகத்தில் கால் ஊன்றியபோதினும் அது தமிழில் முற்றும் கலந்து அதனை மாற்றும் ஆற்றலை இழந்து விட்டது. புலவர்கள் வடசொற்களைப் புகுத்த முற்பட்டபோதும் அதற்கு எப்பொழுதும் எதிர்ப்புத் தோன்றி கொண்டே இருந்துள்ளது''— என்று தமிழ் மொழியின் வரலாற்றினை ஆராய்ந்து வரும் அறிஞர்கள் ஒருமுகமாய் உணர்ந்து உரைத்திடும் கருத்துக்களே மேலே காட்டப்பெற்றுள்ளன.

இவ்வாறு பிறமொழிச் சொற்கள் நேராகவே வந்து தம் மொழியில் கலப்பதை அக்கால மொழிப்புலமை மிக்க அறிஞர்கள் வெறுத்து ஒதுக்கி வந்துள்ளனர் என்பதை ஒவ்வொரு மொழியிலும் நுட்ப உணர்வுடன் ஆய்ந்தால் காணலாகும் உண்மையாகும். தமிழ் மொழியைப் பொறுத்தவரை இவ்வுண்மை மெய்ம்மையாய்த் தெற்றென விளக்கமுற்றுக் குன்றின் மேலிட்ட விளக்காய்க் காட்சி அளிக்கின்றது எனலாம்.

ஒல்காப் புலமை மிக்கத் தொல்காப்பியரும் சொற்களை நான்கு வகையாகப் பிரித்து இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் என்று இலக்கணம் கூறியுள்ளார். அவற்றுள் வட சொல்லிற்கு இலக்கணம் கூறும் முகத்தான்,

''வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே''

என்று மிகத் தெளிவாக வடமொழி எழுத்துக்களை நீக்கி எழுதுதல் வேண்டும் என்பதனை வலியுறுத்தினார்.

காலதேவன் பல நூற்றாண்டுகளை விழுங்கி விட்டான். எத்துணையோ மாற்றங்கள்; நாகரிகப் பழக்க வழக்கங்கள்; உலகம் மிகமிகக் குறுகி வரலாயிற்று; மக்களினப் பெருக்கத்தால் உலகம் தடுமாறும் நிலை; இந்நிலையில் மொழியிலும் பல மாற்றங்கள் நேர்ந்தன; அண்டை அயல் நாடுகளுடன் நெருங்கிய நட்புறவால் மொழிக் கலப்பு மிகுதியும் பெருகலாயிற்று; ஒவ்வொரு மொழியும் தன் தனித்தன்மை இழந்து புதுத்தன்மை பொதுத்தன்மை பெறும் நிலைமைக்கு வந்துற்றது.

உலகப் பொதுமொழி தோன்ற வேண்டும், அதற்கேற்றவாறு புது மொழி உண்டாக்க வேண்டும் என்ற எண்ணம் மொழியியல் அறிஞர்களிடம் தோன்றியுள்ளது. ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற உயரிய கருத்தும் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற கணியன் பூங்குன்றனாரின் வாக்கும் நம் நினைவிற்கு வருகின்றன. காலம் செய்யும் கோலத்தில் மொழியும் அதன் இயல்பும் மாறிப் போவதைத் தடுப்பார் உளரோ? உளரெனில் அவர் ஆற்றல் மிக்க பேராண்மையாளர் என்க. ★

திருக்குறள் பொருட் காட்சி சாலையில் இருக்க வேண்டிய நூலா?

—திருத்துறைக்கிழார்.

இற்றைத் தமிழ்ப் பேராசிரியர் சிலர் திருக்குறள் பொருட்காட்சி சாலைக்குப் போக வேண்டியது என்று பொழிவு செய்கின்றனர். இஃது பொருத்தமான கூற்றாவெனக் காண்போம்.

திருக்குறளில் இன்றைய காலப்போக்குக்கு ஏலாத கருத்துகள் சில இருக்கலாம். அதற்காக அந்நூலையே ஒதுக்கிவைக்க வேண்டுமென்று சொல்வது முறையன்று. அதிலுள்ள நல்ல கருத்துகள் பல; அவற்றை ஏற்கலாமன்றோ? திருவள்ளுவர் இந்நிலையை முன்னறிந்தோ, என்னவோ

''குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்''

என்று கூறியுள்ளார்.

கடைகளில் பல பொருள்கள் விற்பனைக்கு வைத்துள்ளனர். ஒருவர் ஒரு கடைக்குச் சென்றால் அக்கடையிலுள்ள எல்லாப் பொருள்களையும் வாங்குவதில்லை. தனக்குத் தேவையான பொருள்களையே வாங்குவார். தனக்குத் தேவையில்லாத பொருள்கள் இருக்கின்றனவென்று அக்கடைப்பக்கமே போகாதவர் உளரா? அல்லது தனக்கு வேண்டாத பொருள்களை உள்ள கடைகளையெல்லாம் எடுத்துவிட வேண்டுமென்பாருண்டோ? அங்ஙனம் அவர் விரும்பினாலும் எடுப்பாருமுண்டோ? இவர் வேண்டாத பொருள் பிறர்க்குத் தேவையாயிருக்கலாமல்லவா?

இவர்க்குப் பிடிக்காத பொருள் ஏனையோர்க்குத் தீங்கு விளைப்பதாயிருப்பின் மற்றையோர் அதை வாங்கவேண்டாவென அறிவித்து அதனால் ஏற்படும் தீங்கினையும் விளக்கிக் கூறலாம். இன்று வெண்சுருட்டுக் கட்டின்மேல் விளம்பரம் செய்வதுபோன்று செய்யலாம். மாறாக அக்கடையையே ஒழிக்க முனைவது முறையாகாது. இவர்க்கும் பிறர்க்கும் தேவையான பல பொருள்கள் இருக்கும் கடையை ஒழித்துவிட்டால் பிறகு எங்கு சென்று பொருள் பெறுவர்?

திருக்குறளில் இற்றைநிலைக்குப் பொருந்தாத ஒரு சில கருத்துகள் பரவலாகக் காண்கின்றன. அன்றியும் உரையாசிரியர் பலரும் தம்தம் போக்குக்கு ஏற்பப் பொருள் எழுதியுள்ளனர். அத்தகு பொருள் சிலர்க்கு மன உளைச்சலை யுண்டாக்குவதும் இயல்பே. அவ்வுரையை மறுத்து உண்மையான உரையை எழுதி வெளியிட வேண்டுமேயன்றி நூலையே ஒதுக்கித் தள்ள முற்படுதல் நன்றன்று. திருக்குறளுக்கு இணையான வேறு ஒரு நூல் இன்று அறம், பொருள், இன்பம் பற்றிக் கூறுவதற்கு இல்லை. இதை விடச் சிறந்த நூலை ஒருவர் இயற்றிவிட்டால் இதுதானே மறையத் தொடங்கிவிடும். இறுதியில் காட்சி சாலைக்குப் போய் விடும்.

திருவள்ளுவர் 133 கருத்துகளை 133 அதிகாரங்களில் அதிகாரத்திற்கு 10 குறட்பாமேனி யாத்துளார். அந்த 133 தலைப்பின் கீழ் தம் கருத்துகளை வைத்துப் பாப்புனைந்து பெருநூலாக்கி வெளியிட்டால் பெரும் பயன்றரும். அத்தகு நூலொன்றில்லாக் கடை, இருக்கின்ற ஒன்றையும் ஒழிக்க அல்லது ஒதுக்க முற்படலாமா?

குறள் மீது குறை கூறுவார், திருவள்ளுவர் வாழ்ந்த காலம், அன்றைய மக்கள் வாழ்க்கைமுறை, அவரது சமயம் ஆகியவற்றைக் கருதிப் பார்த்தல் நன்று. உரையெழுதுவாரும் அவ்வாறு செய்தல் நன்றாம். தனாஅது நிறுத்தல் குறிக்கொள்ளல் கூடாது.

திருக்குறள் கடையில் 133 சரக்குகள் உள்ளன. மக்கள் பலர்க்கும் தேவையான சரக்குகள் பலவுள. சில சரக்குகள் நமக்குத் தேவையில்லை யென்பதற்காகத் திருக்குறள் கடையையே மூடிவிடலாமா? நல்ல சரக்குகள் வாங்க வேறு கடையேது?

அறத்துப்பாலில்,

''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற'' என்னுங் குறளும்,

பொருட்பாலில்,

''நுண்மாண் நுழைபுல மில்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று'' என்னும் குறளும்,

தி. பொ. சா. இ. வே. நூலா?

இன்பத்துப் பாலில்,

''யாரினுங் காதல மென்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று'' என்னும் குறளும்,

எத்துணைச் சிறத்த சரக்குத் துணுக்குகள் என உன்னுக! இவை போன்று பல துணுக்குகள் திருக்குறள் கடையில் உள.

தமிழ்ப் போர்வையில் கரந்திருந்து கொண்டு தமிழுக்குக் கேடு சூழும் தமிழறிஞரும் உளர் என்பதைத் தமிழ்நலம் பேணும் நல்லறிஞர் இனங்கண்டு ஒதுக்க வேண்டும். அவர்தம் கோட்பாடு தந்நலமே யன்றித் தமிழ் நலமன்றாம்.

பிற்காலப் பிறங்கடையினர் முற்காலமறிய உதவுவன திருக்குறள் போன்ற நூல்களே. அதனைப் பொருட்காட்சி சாலைக்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னால் தம் பெருமை உயருமென்ற எண்ணம் போலும். மக்கட்குக் கேடுவிளைக்கும் நூல்கள் பல வுளவே! அவற்றையன்றோ முதலில் ஒழிக்க வேண்டும்? முன் வருக, முயல்க!

ஓர் அறிவிப்பு

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஓர் அங்கமாகத் திகழும் கரந்தைப் புலவர் கல்லூரி கோடை விடுமுறைக்குப் பின் 24—6—1981-ஆம் நாளன்று திறக்கப்பெறவிருக்கின்றது. இக்கல்லூரியில் 1980—81-ஆம் ஆண்டு முதல் இள. இல., (பி. லிட்.,) பட்டப்படிப்பின் கால வரையறை மூன்றாண்டுகளாகும். இவ் யாண்டு முதல் மேனிலைக் கல்வி (+ 2) பயின்று அரசுத் தேர்வில் வெற்றி பெற்றவரும் பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வில் (P. U. C.) வெற்றி பெற்றவரும் பி. லிட். பட்ட வகுப்பில் சேரும் தகுதி பெற்றவராவர்.

கல்விக் கட்டணம் ஓராண்டுக்கு ரூ. 183/- ஆகும். இதனை இரண்டு பருவங்களில் செலுத்துதல் சாலும். தமிழக அரசு கல்வித்துறை விதிகள் 92-ன்படி சலுகைகளுக்குரியோருக்குச் சலுகைகள் அளிக்கப்பெறும். கல்விக் கட்டணத்துடன் பல்கலைக் கழகப் பதிவுக் கட்டணமாக ரூ. 25/-ம் மெட்ரிக்குலேசன் கட்டணம் ரூ. 10/-ம் செலுத்துதல் வேண்டும். இவையன்றிச் சேர்க்கைக் கட்டணமும் தனிக்கட்டணங்களும் (Special Fees) உண்டு.

மூன்றாண்டுப் பட்டப் படிப்பாகிய பி. லிட். பயின்று தேர்ச்சி பெற்றவர் தமிழ் எம். ஏ., வகுப்பிலும், பி.எட். பயிற்சி வகுப்பிலும் சேரலாம். மற்றும், தமிழக அரசு தேர்வாணைக் குழுத் தேர்வுகள் அனைத்தையும் பி. ஏ. பட்டம் பெற்றவரைப் போன்று எழுதும் தகுதியுமுண்டு.

ஆடவர், மகளிர் இருபாலருக்கும் விடுதி வசதியுண்டு. தமிழக அரசு பிற்பட்டோர் நலத்துறையினர் அரிசன நலத்துறையினர் வழங்கும் உதவித் தொகைகள் பெற பரிந்துரை செய்யப்பெறும்.

சேர விரும்புவோர் கல்லூரி முதல்வருடன் தொடர்பு கொள்க. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

முதல்வர்,
கரந்தைப் புலவர் கல்லூரி,
தஞ்சை–613 002.

பொழிற்றொண்டர்.